விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 26
ஒலி 010 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 14 ஞாயிற்றுக்கிழமை (29.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கட்சியின் தலைவர் மாவையே

## தலைவரை நீக்கும் அதிகாரம் மத்திய குழுவுக்கு இல்லை

### வெளிநடப்புச் செய்தார் சிவமோகன்

(வவுனியா)

தலைவரை நீக்கும் அதிகாரம் மத்தியகுழுவுக்கு இல்லை. தலைவர் தலைவராகவே இருப்பார் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத் 04

காற்றழுத்தத் தாழமுக்கம் தணிந்தது

## அரசியல் குழுத் தலைவர் - மாவை பதில் தலைவர் - சிவஞானம்

### தப்பியது தமிழரசுக் கட்சி

(வவுனியா)

அரசியல் குழுத் தலைவராகத் தொடர்ந்தும் மாவை சேனாதிராசா செயற்படுவார் எனவும் கட்சியின் பதில் தலைவராக சி.வி.கே.சிவஞானம் செயற்படுவார் எனவும் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 19

## எம்.ஏ.சுமந்திரனே ஊடகப் பேச்சாளர்

### பதில் தலைவர் சிவஞானம் தெரிவிப்பு

(வவுனியா)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளராகத் தொடர்ந்து எம்.ஏ.சுமந்திரன் செயற்படுவார் எனக் கட்சியின்பதில்தலைவராக நியமிக்கப்பட்ட சி.வி.கே.சிவ 19

# புலிகளின் உக்கிர தாக்குதலால் போர் நிறுத்தம் செய்தோம்!

## வாஜ்பாய் நினைவு தினத்தில் திருவாய் மலர்ந்தார் ரணில்



(புதுடில்லி)

2001ஆம் ஆண்டு அன்றைய பொருளாதார மையங்கள் மீதான புலிகளின் தாக்குதல்களால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக விடுதலைப் புலிகள் அமைப்புடன் போர் நிறுத்த உடன்படிக்கையை மேற்கொள்ள நேர்ந்ததாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

## நீதி அமைச்சரின் பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டம்

### இருவரிடம் கிடுக்குப்பிடி விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்ற இணையத்தளத்தில் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் "கலாநிதி" என்ற பட்டம் குறிப்பிடப்பட்டமை தொடர்பில் சுமார் மூன்று மணிநேரம் பாராளுமன்ற அதிகாரிகளிடம் இருவரிடம் இரகசியப் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர். 19

தமிழரசுக் கட்சியிலிருந்து

## அரியநேத்திரன் அவுட் சிவமோகன் இடைநிறுத்தம்

### ஆட்டம் தொடரும் என்கிறார் சுமந்திரன்



(வவுனியா)

கடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி வேறு கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் ஊடாகத் தேர்தலில் போட்டியிட்டவர்கள் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கப்படுவதாகத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் 19

கடந்த கால அரசுகளுக்காக

## அரச அதிகாரிகள் இன்னும் எம்முடன் வாதிடுகின்றனர்

### அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் தற்போது அரச அதிகாரிகளுடன் போராடி வருவதாகக் கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

'ஷில்பாபிமானி' ஜனாதி 04

## பெப்ரவரி 15க்குள் சொத்து விபரங்களை சமர்ப்பிக்குக!

### எம்.பிக்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர் குஷானி லோஹணதீர அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தற் 19

## ஓய்வு பெறுகிறார் சவேந்திர சில்வா

(கொழும்பு)



ஜெனரல் சவேந்திர சில்வா, பாதுகாப்புப் படைகளின் பிரதானிப் பதவியிலிருந்து இம்மாதம் 31ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவேந்திர 04

## யாழில் அதிகரிக்கும் டெங்கு நோய்த் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 07.09.1958

மறைவு 29.11.2024

கடந்த 29.11.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் இரத்தினசபாபதி குருபரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 27.12.2024 வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு 29.12.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

(658)

இல.30, நீக்கிலாஸ் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
071 2400 001


இப்பொழுது யாழ்ப்பாணத்தில்!
**SOLA CHEMICAL COMPANY (PVT) LTD**

| | | | |
|---|---|---|---|
| எயார் ப்ரெஷ்னர் | 4L | ~~3000~~ | 1000 |
| கண்ணாடி கிளீனர் | 4L | ~~1500~~ | 850 |
| கல்சியம் நீக்கி | 4L | ~~1400~~ | 850 |
| சலவைத் திரவம் | 4L | ~~2000~~ | 950 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~1400~~ | 850 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1300~~ | 750 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~1400~~ | 850 |
| ஹானட் வோஷ் | 4L | ~~2000~~ | 1000 |

100g டிஷ் வோஷ் சோப் 2 கட்டி ரூ 100

விசேட விலைக் கழிவு

(2878)

NO.576/2C, Siyambalape road,
Heiyanthuduwa, makola,
Reg No.PV00240433

288, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494



## மணமகன் தேவை

26.01.1998ல் - 8 Pm - பூராடம் 4ஆம் பாதம்,
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜேர்மனியில் பெற்றோருடன் வசித்துவரும் மணமகளிற்குப் பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் உயர்கல்வி, டிப்ளோமா படித்தவராக இருக்க வேண்டும். ஜேர்மனி, சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 663 0273**

**Viber,Whatsapp : 074 3820 000**

(C-1907)


## யாழில்...

இந்நிலையில் டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த எதிர்வரும் வாரத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு தினங்களாக இரண்டு தினங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரு-7)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



## புதிய காவலன் விவாக பொருத்துனர்

மெய் அன்பர்களே.

புதிய காவலன் விவாகப் பொருத்துனர் நிலையம் சிறிது காலம் நடைபெறாது இருந்தது எல்லோரும் அறிந்த உண்மையே.


தற்போது புதிய காவலன் விவாகப் பொருத்துனர் சேவை கோப்பாய், கோண்டாவில் ஸ்ரேசன் றோட்டில் நிரு ரியூசன் சென்ரர் அருகாமையிலும், வடமராட்சி அல்வாய் சதாபொன்ஸ் ரியூசன் அருகாமையிலும் முன்னெடுக்கின்றோம். மேலும், தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அந்த நல்ல மாதத்தில் தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்திற்கு எதிரில் கோப்பிறட்டி வளவில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் புதிய காவலன் விவாகப் பொருத்துனர் நிலையம் செயற்பட இருக்கின்றது என்பதை வலிகாமம் வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகிறோம். எப்போதும் போல் எல்லோரும் பரிபூரணமாக ஒத்துழைத்து நல்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

(C-1907)

தொடர்பு -

**077 663 0273 (ப.முருகையா)**


# மரண அறிவித்தல்



மலர்வு 08.09.1945

உதிர்வு 19.12.2024

## அமரர் சோமசுந்தரம் சிவம் (சிவமண்ணை)

யாழ்ப்பாணம் இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சிவம் (சிவமண்ணை) அவர்கள் 19.12.2024 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மனோன்மணி தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ராசம்மா, சோதிமலர், நீதிமலர், தனலட்சுமி (ராசாத்தி) ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்வராசாத்தி, கந்தையா, அருமைத்துரை, பரம்சோதி மற்றும் முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கோபி கிருஸ்ணா (லண்டன்), பாபுஜி (பிரான்ஸ்), புரந்தரி (கனடா), மிருளாயினி (கனடா), உமையாழினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெனனி, சிவரூபன் (ரூபன்), சிவசக்தியகுமார் (குமார்), சிறிகோபிகிருஸ்ணா (கோபி) ஆகியோரின் மாமனாரும் திவ்வியன், அனுஜன், அக்சயன், ஆருஜன், மானஷா, பவிஸ்ணா, கவின், பவித்ரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் உள்ள North Toronto Crematorium Inc என்ற முகவரியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**Sunday December 29th, 2024 From 8:00 a.m. to 9:00 a.m.**
**Service:**
**Sunday December 29th, 2024 From 9:00 a.m. to 10:30 a.m.**
**Followed by cremation at North Toronto Crematorium Inc.**
**2 Stalwart Industrial Dr**
**Gormley, ON**
**L0H 1G0**

இணுவில் (684) தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் ஆரம்பம்!

# சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்ட ராஜபக்ஷவின் மகன் யோஷித



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்சவை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

சட்டவிரோத சொத்துக்களை பெற்றுக்கொண்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக குறித்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் மூன்றாம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பாரிய நிதி மோசடி மற்றும் கொலைச் சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய ஐந்து முன்னாள் அமைச்சர்களின் விசாரணைகளை துரிதப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அண்மையில் தெரிவிக்கப்பட்டது.


குறித்த ஐந்து பேர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் தகவல் அறிக்கைகளின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சாவகச்சேரியில் குடிமனைக்குள் புகுந்த மலைப்பாம்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி மீசாலை வேம்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு குடிமனைக்குள் வெங்கிணாந்தி இன மலைப்பாம்பு ஒன்று புகுந்த நிலையில் மக்கள் அதனை உயிருடன் பிடித்துள்ளனர்.

வீட்டு வளாகத்துக்குள் நுழைய முனைந்த 8 அடி நீளமான குட்டி வெங்கிணாந்தி இன மலைப்பாம்பே இவ்வாறு பிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)



## குறைவடைந்த முட்டை விலை குறைவடையாத பேக்கரி உணவுகள்

### நுகர்வோர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சந்தையில் முட்டையின் விலை குறைவடைந்துள்ள போதிலும் முட்டை சார்ந்த வெதுப்பக உற்பத்திப் பொருட் களின் விலை தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுவதாக நுகர்வோர் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த காலங்களில் முட்டையின் விலை அதிகரித் திருந்தமை முக்கிய பேசு பொருளாக காணப்பட்டது. இதன்படி, கடந்த காலங்களில் சந்தையில் முட்டை ஒன்று 60 முதல் 70 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது.

இதனையடுத்து இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் தற்போது சந்தையில் முட்டை ஒன்று 25 முதல் 30 ரூபா விற்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில் இதுவரையில் முட்டை சார்ந்த வெதுப்பக உற்பத்திகளின் விலை குறைவடையவில்லை என நுகர் வோர் குற்றம் சாட்டுகின்றனர். மேலும் முட்டையின் விலை குறைவடைந்ததன் ஊடாக மாத்திரம் வெதுப்பக உற்பத்திகளின் விலையைக் குறைக்க முடியாது என இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெதுப்பக உற்பத்திகளின் விலை குறைக்கப்பட வேண்டுமாயின் கோதுமை மா மற்றும் வெண்ணெய் என்பவற்றின் விலையும் குறைவடைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்தியத்தின் பிரதான அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

நுகேகொட இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூக அரசறிவியல் பீட பீடாதிபதி பேராசிரியர் அன்ரன் பியரத்னே தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீ சாய் முரளி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (நி-8)


லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719
WESTERN UNION WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

பணிப்பெண் தேவை
முதிய பெண்மணி ஒருவரை பராமரிப்பதற்கும் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கும் பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 239 3124


## துப்பாக்கிகளுடன் கைது

(வவுனியா)

வவுனியாவில் 50 இற்கு மேற்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர் உட்பட இருவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் 50 இற்கு மேற்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்பு டைய நபர் உட்பட இருவரை உள்நாட்டு துப்பாக்கி மற்றும் திருட்டு சம்பவங்களுக்கு பயன்படும் என சந்தேகிக்கப்படும் இரு இயந்திரங்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பிரதான நபருக்கு எதிராக நீதிமன்றில் நான்கு திறந்த பிடியாணை மற்றும் ஆறு திகதியிடப்பட்ட பிடியாணை என்பன இருப்பதுடன் அவர்களிடம் முன்னெடுக்கப்படுகின்ற மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட இருவரையும் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-8-250)

## நேபாளம் செல்லும் ரணில்

(கொழும்பு)



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நேபாளம் செல்கிறார்.

அவர் தனது தனிப்பட்ட பயணமாக நேபாளம் வர உள்ளார் என்று அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சகத்தின் பேச்சாளர் கிருஸ்ண பிரசாத் கால் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஒரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதியாக அவருக்கு தேவையான நெறிமுறை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)


யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரிலும்..
திருமணம் முடித்து Family வீசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி
IELTS LIFE SKILLS
A1 UK Qualification
DEUTSCH FRENCH DUTCH
ஜேர்மன், சுவிஸ், பிரான்ஸ், நெதர்லாந்து மொழிப் பாடநெறிகளும் நடைபெறுகின்றது
BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
Nelliyady. Tel : 021-7284200
Kilinochchi. Tel : 021-4927114
Vavuniya. Tel : 024 -4930041
Vavuniya 2nd Tel : 024-4930042
Puthukkudiyiruppu. Tel : 021-2290933
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Kalmunai. Tel : 067-4300207
Mullaithivu.. Tel : 021-7284344
Mannar. Tel : 021-4332294
(681) IDP IELTS, Ukvi Exam centre


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓரே டென்ஷன்...டென்ஷன்

# நிதிஷ் குமார் சதம் குறித்து அவரது தந்தை நெகிழ்ச்சி



இந்தியா- அவுஸ்திரேலியா இடையிலான 4 ஆவது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் தொடங்கியது. இதில் டொஸ் வென்ற அவுஸ்திரேலியா முதலில் பட்டிங் செய்வதாக அறிவித்தது. அதன்படி களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்சில் 122.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 474 ரன்கள் எடுத்தது.

அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஸ்மித் 140 ரன்களும் லபுசேன் 72 ரன்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் பும்ரா 4 விக்கெட், ஜடேஜா 3 விக்கெட் வீழ்த்தினர். தொடர்ந்து இந்திய அணி தனது முதல் இன்னிங்சை ஆடியது. 2 ஆவது நாள் முடிவில் இந்திய அணி 5 விக்கெட்டுகளை இழந்து 164 ரன்கள் எடுத்திருந்தது. நேற்று 3 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. பண்ட் 28 ரன்களிலும் ஜடேஜா 17 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். பின்னர் ஜோடி சேர்ந்த நிதிஷ்குமார்-வோஷிங்டன் சுந்தர் பொறுப்புடன் விளையாடி அணியின் ஸ்கோரை உயர்த்தினர்.

இதனையடுத்து மழை குறுக்கிட்டதால் சிறிது நேரம் ஆட்டம் தடைப்பட்டது. பின்னர் மீண்டும் ஆட்டம் தொடங்கியதும் நிதானமாக விளையாடி வந்த வாஷிங்டன் சுந்தர் 50 ரன்கள் அடித்து ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய பும்ரா டக் அவுட்டாகி வெளியேறினார். இந்நிலையில் பொறுப்புடன் விளையாடி வந்த நிதிஷ்குமார் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது முதல் சதத்தை பதிவு செய்து அசத்தினார். 3 ஆம் நாள் முடிவில் இந்திய அணி 9 விக்கெட் இழப்பிற்கு 358 ரன்கள் அடித்துள்ளது. நிதிஷ்குமார் 105 ரன்களுடனும் சிராஜ் 2 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

இந் நிலையில் நிதிஷ்குமாரின் தந்தையிடம் சதம் குறித்து வர்ணனையாளர் கில் கிறிஸ்ட் கேள்வி எழுப்பினார். அதற்கு நிதிஷ் குமாரின் தந்தை கூறியதாவது,

எங்கள் குடும்பத்திற்கு இது சிறப்பு வாய்ந்த தினம். இந்த நாளை எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாது. 14-15 வயது முதலே நன்றாக ஆடி வந்தான். இப்போது சர்வதேச கிரிக்கெட்டிலும் சிறப்பாக ஆடுகிறான். உண்மையில் இந்த நாள் ஒரு சிறப்பான நாள், சிறப்பான உணர்வைத் தந்த நாள் என்றார். உடனே கில்கிறிஸ்ட், 99 ரன்களில் இருந்த போது உங்கள் உணர்வுகள் என்ன என்றார்.. அதற்கு நிதிஷின் தந்தை. "ஒரே டென்ஷன் டென்ஷன் டென்ஷன் என்றார். ஒரு விக்கெட்தான் இருந்தது. நல்ல வேளை சிராஜ் நின்றார்" என்றார் நெகிழ்ச்சியுடன். (நி-8)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனாமடம் ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 400 | 500-600 | 500 |
| உருளைக்கிழங்கு | 240 | 210 | 220 | 260 |
| பச்சைமிளகாய் | 1300 | 1200 | 1200-1300 | 1000 |
| தக்காளி | 400 | 400 | 350-400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 200 | 150-200 | 200 |
| கோவா | 200 | 250 | 260 | 300 |
| கரட் | 350 | 280 | 260 | 400 |
| பூசணி | 200 | 190 | 200 | 250 |
| புடோல் | 200 | 250 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 100 | 100-130 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 200 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 380 | 200 |
| பாகற்காய் | 800 | 1000 | 1000 | 1200 |
| வெண்டக்காய் | 200 | 250 | 150-200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 450 | 350-500 | 400 |
| லீக்ஸ் | 350 | 380 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 400 | 300 | 500 |
| கறிமிளகாய் | 800 | 800 | 700-800 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 300 | 400 | 400-500 | 400 |
| கத்தரிதம்புள்ள | 450 | 250 | -- | 450 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 300 | 450 | 350-550 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 90-170 | 150-200 |
| இராசவள்ளி | -- | 900 | 800 | 700 |
| வெங்காயப்பூ | 480 | 850 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 100 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 90 | 200 |

## புலிகளின்...

இதன் போது தாம் கடுமையான அரசியல் நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிட்டதாகவும் அமைதிப் பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எதிர்த்ததில் இருந்து 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடையும்வரை இந்தியா இலங்கைக்கு உதவியதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற அடல் பிஹாரி வாஜ்பாயின் 7 வது நினைவுச் சொற்பொழிவில் உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

வாஜ்பாயும் நானும் அதிகாரத்தில் இருக்கும் போது பயங்கரவாதத்திற்கு எதிரான போர் உச்சத்தில் இருந்தது. நாங்கள் வெளியிட்ட இரண்டு அறிக்கைகள் அனைத்து வகையான பயங்கரவாதத்தையும் உலகளவில் எதிர்க்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டின.

இலங்கையின் பாதுகாப்புப் படைகளுக்கு பயிற்சி மற்றும் உபகரணங்களை வழங்குவதில் தொடர்ந்து ஒத்துழைப்பது பற்றி அக்ரோபர் 2003 அறிக்கையின் குறிப்பில் உள்ளது.

கடற்புலிகளின் கடல்சார் நடவடிக்கைகளில் பிரபாகரன் அதீத நம்பிக்கை கொண்டிருந்தார். எனினும், எனது பார்வையில் இது விடுதலைப் புலிகளின் குறைபாடாகக் கண்டறிந்தேன். எனவே, வாஜ்பாய்யும் நானும் எங்கள் கடற்பகுதியில் அரசு அல்லாதவர்கள் செயற்பட அனுமதிக்க மாட்டோம் என்று ஒரு உடன்பாட்டுக்கு வந்தோம். கடற்புலிகளின் செயற்பாடுகளை நடுநிலையாக்கி பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை உறுதிப்படுத்தினோம்.

2003 ஆம் ஆண்டளவில், நிலைமை மூலோபாய ரீதியாக, பொருளாதார ரீதியாக மற்றும் சர்வதேச ரீதியாக இலங்கைக்குச் சாதகமாக மாறியது. சமாதானப் பேச்சுவார்த்தையில் தன்னால் வெற்றி பெற முடியாது என்பது பிரபாகரனுக்குத் தெரியும். எனவே, அமைதிப் பேச்சுவார்த்தையை அவர் புறக்கணிக்கத் தொடங்கினார்.

இந்த முக்கியமான கட்டத்தில், இலங்கை அரசாங்கம் முன்வைத்த முன்மொழிவுகளுக்கு விடுதலைப் புலிகளின் பதிலை வலியுறுத்தியும் பேச்சுவார்த்தைகளை முன்கூட்டியே மீண்டும் தொடங்குவதற்கும் இந்தியா எங்களுக்கு ஆதரவளித்தது. அன்றிலிருந்து 2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் வரை இந்தியா எமக்கு ஆதரவளித்தது என்றார். (ந-7)

## தலைவரை...

இருந்து இடைநடுவில் வெளிநடப்பு செய்த அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

எப்போதும் எமது கட்சித் தீர்மானங்களை எடுக்கும்போது அனைவரையும் சாப்பாட்டுக்கு செல்லுமாறு தெரிவித்து விட்டு எடுப்பது வழமை. இன்றும் (நேற்றும்) அதே நிலைமை தான் இடம் பெற்றது.

இவ்வாறு தான் தேர்தல் நியமனக் குழுவுக்கும் இடம்பெற்றிருந்தது. தற்போதைய செயலாளர் இருக்கும்போது தான் இந்தக் கட்சியில் இவ்வாறான மோசமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

தலைவரை நீக்கும் அதிகாரம் இந்த மத்திய குழுவில் எவருக்குமே இல்லை. அதனை நான் நேரடியாக மத்திய குழுவுக்கு தெரிவித்துவிட்டு கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்திருக்கிறேன்.

என்னுடைய நோக்கம் இந்தக் கட்சியை சீராக்குவது தான். வழக்குகளை பின் வாங்குவதாக சுமந்திரன் வாக்குறுதி வழங்கி இருக்கிறார். அவரால் சாட்டப்பட்டவர்கள் தான் இந்த வழக்குகளை பதிவிட்டார்கள் என்பதற்கு இது ஒரு சாட்சி.

ஆகவே, அவரும் அந்த வழக்குகளில் பின்வாங்கினால் நானும் எனது வழக்குகளில் இருந்து பின்வாங்கி பொதுச் சபை கூட்டத்துக்கு செல்வதற்கு தயாராகத்தான் இருக்கிறேன்.

தலைவரை தலைவர் பதவியில் இருந்து நீக்கவே முடியாது. நாங்கள் கேட்டுக்கொண்டது தலைவர் தலைவராகவே இருக்க பதில் தலைவர் கூட்டங்களை நடத்துமாறுதான். ஆனால், அவர்கள் மாறுபட்ட செய்தியை வெளியிடுகிறார்கள் என்றார். (ந-7)

## அரச...

பதி விருதுகள் வழங்கும் நிகழ்வில் நேற்று சனிக்கிழமை கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

தேசிய மக்கள் சக்தி ஆட்சியை கைப்பற்றுவதற்கு முன்னர் மக்களின் உரிமைகளுக்காக வீதியில் இறங்கி போராட வேண்டியிருந்தது. மேலும் கடந்த அரசாங்கத்தின் தவறான செயல்களை விமர்சித்தோம்.

மக்களுக்கு எதிராகச் செயற்பட்ட முன்னாள் அரசுகளின் கொள்கைகளின்படி, பழைய நடைமுறைகளை அகற்றுவதில் அரசாங்க அதிகாரிகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கங்களின் போது அவர்கள் கடைப்பிடித்த கொள்கைகளுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதில் சிரமப்படுகின்றனர்.

இந்த நிலைமையை அதிகாரிகளை நம்ப வைப்பதும் கடினமாக இருக்கின்றது. அதிகாரிகள் இன்னும் தங்கள் பழைய தீர்மானங்கள், உடன்படிக்கைகள், அமைச்சரவை முடிவுகள் மற்றும் வர்த்தமானி அறிவிப்புகளில் உறுதியாக இருக்கின்றனர்.

அதிகாரிகள் இன்னும் எங்களுடன் வாதிடுகிறார்கள், இன்று நாம் நிதியமைச்சகம், வரிக் கொள்கை போன்றவற்றுடன் போராட வேண்டியுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## ஓய்வு...

சில்வாவின் சேவைக் காலத்தை எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடித்திருந்தார்.

புதிய அரசாங்கத்தின் கீழ் அவருக்கு பதவி நீடிப்பு கிடைக்காது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சவேந்திர சில்வாவின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவியை நீக்குவதா அல்லது தக்கவைப்பதா என்பது குறித்து அரசாங்கம் இன்னும் தீர்மானிக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர சபை

## வரியிறுப்பாளர்கள் கவனத்திற்கு...

(யாழ்ப்பாணம்)

வரியிறுப்பாளர்கள் தமது ஆதனங்களுக்கான 2025 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியினை ஜனவரி 31 ஆம் திகதிக்குள் செலுத்தி 10% கழிவினையும், காலாண்டிற்கான ஆதன வரியினை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தி 5% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேலும் யாழ்.மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணிவரையும் வார இறுதி நாட்களிலும் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் ஆதன வரியி னைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறிவித்தல் (K from) கிடைக்கப் பெறாதவர்கள் இதற்கு முன்னைய ஆண் டிற்கான ஆதனவரி அறிவித்தல் அல்லது முன்பு ஆதனவரி செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டு அல்லது ஆதனம் அமைந்துள்ள வட்டாரம் வீதி மற்றும் ஆதன இலக்கம் போன்ற விபரங்களைச் சமர்ப்பித்தும் 2025 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியைச் செலுத்த முடியும்.

இதே போன்று கடந்த காலங்களுக்கான ஆதனவரி நிலுவைகளையும் செலுத்துவதன் மூலம் ஏனைய சேவைகளையும் இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். 2024 ஆம் ஆண்டு ஆதன வரிப் பெறுமதியிலும் கட்டணங்களிலும் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.

ஆதனவரி அறிவித்தல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021221 7697 என்ற தொலைபேசிமூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்தார். (நி-8)


## IELTS வகுப்புக்கள்

கொழும்பில் உயர் புள்ளிகளை (High band) பெற கற்பித்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர் மூலம்,
தற்பொழுது யாழ்ப்பாணத்திலும் IELTS தனிப்பட்ட, குழு மற்றும் Online மூலமாகவும் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது. (கல்வி நிறுவனங்களும் கற்பிப்பதற்காக தொடர்பு கொள்ளலாம்.)

Mobile Whats app - 0740231967
M.Visvanathan
IELTS, A1, A2, B1, B2, UKVI, PTE
(c-020)



A/L பரீட்சையின் பின்னர்....

யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரிலும்..

## Diploma in Spoken English

- முழுநேர / பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
- மாணவர்கள் சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கும், Listening, Reading & Writing இல் தேர்ச்சியடைவதற்கும் 100% உத்தரவாதம்.
- மாணவர்களின் ஆங்கிலறிவுக்கேற்ப பாடநெறிகள் Basic, Intermediate & Advanced எனத் தனியாக நடைபெறும்.

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605

23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

Nelliyady. Tel : 021-7284200
Kilinochchi. Tel : 021-4927114
Vavuniya. Tel : 024 -4930041
Vavuniya 2nd Tel : 024-4930042
Puthukkudiyiruppu. Tel : 021-2290933
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Kalmunai. Tel : 067-4300207
Mullaithivu. Tel : 021-7284344
Mannar. Tel : 021-4332294

IDP IELTS. Ukvi Exam centre (681)



# விற்பனைக்கு

1. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 32 அடி அகலமும் 200 அடி நீளமும் (நவீன சந்தைக்கு முன்பாக) இரண்டு கடைகளும்.
2. யாழ் C.T.B தரிப்பிடத்திற்கு பின்புறத்தில் நர்மதா நகைக் கடைக்கும் மலையான் கபேக்கும் இடையில் 4 கடைகளும்
3. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மரக்கறிச் சந்தைக்கு முன்பாக இரண்டு கடைகளும்
4. யாழ்.கஸ்தூரியார் வீதியில் இரண்டு மாடிக்கடையும்
5. யாழ்.மின்சார நிலைய வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணியும் 1 1/2 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு
077 723 2535
(c-1903)



## Florance Nursing Home Care Service Centre

## புளோரன்ஸ் நேர்சிங் ஹோம்கேர் சர்வீஸ் சென்டர்



உங்கள் தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக வீட்டில் வைத்து பராமரிக்க முடியாதவர்கள் பாரிசவாதமுடையவர்கள் மற்றும் நீண்டகால படுக்கை நோயாளிகள் அனைவரையும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் மிக பாதுகாப்பாகவும் நாங்கள் பார்த்துக்கொள்வோம்.

- உணவு முறைகள் மிக ஆரோக்கியமாக வழங்கப்படும்.
- முதியோர்களின் மனநிலையறிந்து / உடல் நிலையறிந்து பொழுது போக்கான விடயங்கள் / உடற்பயிற்சி / பிசியோ தெரபி / மன அமைதிக்கான தியானங்கள் மற்றும் வழிபாடுகள் நடைபெறும்.
- முதியோர்களின் ஆரோக்கியம் கருதி மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் மாதாந்த கிளினிக் மருத்துவ சேவைகள் என்பன வழங்கப்படும்.
- அவர்களின் வீடுகளில் இருப்பதுபோலவே மகிழ்ச்சியாகவும் அன்பாகவும் எமது தாதியர்களின் மேற்பார்வையிலும் உதவித் தாதியர்களின் பராமரிப்பிலும் பாதுகாக்கப்படுவார்கள்.

மிகக் குறைந்த கட்டணத்தில் சிறந்த நிறைவான சேவையை வழங்குகின்றோம்.

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள
077 718 6438 / 077 482 4473
சுன்னாகம் வீதி, கந்தரோடை, யாழ்ப்பாணம்.
(c-1906)


# இராசிபலன்

29.12.2024
மார்கழி 14, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 4-38 மணிவரை

கேட்டை பின்னிரவு 12.10 மணிவரை
சுபநேரம் 9.28-10.58 மணிவரை
இராகுகாலம் 4.58-6.28 மணிவரை

சந்திராஷ்டமம்
அச்சுவினி, பரணி.

வளவன்


மேஷம்

பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் அவசியம், உறவினர் வழியில் சுபவிரயங்கள் அதிகரிக்கலாம், தேகநலனில் கவனம் தேவை.


கடகம்

பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


துலாம்

பொறுமையால் பெருமை காணும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.


மகரம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், மூத்த சகோதரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


சிம்மம்

நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.


விருச்சிகம்

அன்பால் சாதித்துக் காட்டும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படையும் நாள்.


கும்பம்

நல்லவர்களின் அனுசரணையும் ஆதரவும் கிடைக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.


மிதுனம்

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கன்னி

வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், உடன்பிறப்புக்கள் உதவ முன்வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.


தனுசு

காரிய அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.


மீனம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அன்பால் சாதித்துக் காட்டும் நாள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே. அது உன்னுடைய மகிழ்ச்சியை அழித்து விடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளை செய்யாதே!

# தமிழரசுக் கட்சிக் கூட்டம் இடம்பெற்ற விடுதியில் காட்சியளித்த பதாகை

(வவுனியா)

தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளை செய்யாதே உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுடன் கூடிய பதாகை ஒன்று தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெறும் மண்டபத்திற்கு முன்னால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பதாகையை தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்கள், மற்றும் தொண்டர்கள் உரிமை கோரியுள்ளனர்.




இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் இப் பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இதன்போது மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள் குறித்த பதாதையை பார்வையிட்ட பின்னர் கூட்ட மண்டபத்திற்குள் சென்றிருந்தனர்.

குறித்த பதாகையில் நீதிமன்ற வழக்குகளை மீளப்பெறு, பொதுச்சபையை உடனடியாக கூட்டு, யாப்பின் படி தலைவர் உட்பட யாரையும் வெளியேற்றும் அதிகாரம் மத்திய குழுவிற்கு இல்லை என்பதை ஏற்றுக்கொள், 2019 இல் பொதுச்சபையால் நியமிக்கப்பட்ட தேர்தல் நியமனக் குழுவை இயங்கவிடு, மத்திய குழுவின் பலவீனமான தீர்மானங்களால் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளை செய்யாதே என்ற விடயங்கள் எழுதப்பட்டிருந்தது. (நி-8-250)

## வெடுக்குநாறி மலையில் நிம்மதியான வழிபாட்டிற்கு வழி ஏற்படுத்துங்கள்

### ரவிகரன் எம்.பி வலியுறுத்து



(வவுனியா)

வவுனியா வடக்கு - ஒலுமடு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் தமிழ் மக்கள் நிம்மதியான முறையில் வழிபடுவதற்கான வழி வகைகளை ஏற்படுத்துமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அதில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கோ, பொதுமக்கள் சென்று வருவதற்கோ எவ்வித தடையுமில்லை என்ற நீதிமன்றத் தீர்ப்பிற்கு அமைவாக அங்கு மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு அங்கு மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்ற போதும், இந்த ஆலயத்திற்குச் செல்வதற்கான பிரதான வீதி மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால ஆட்சியாளர்கள் அவ் வீதியை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கமானது அவ் வீதியை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு, குறித்த ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று வழிபாடுகளுக்காகச் சென்ற அடியவர்கள் குடிநீர் இன்றி மிகுந்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

இந் நிலையில் குடிநீரைப் பெறுவதற்காகவும் ஆலய வழிபாடுகளுக்கான நீரைப் பெறும் நோக்கிலும் ஆலய நிர்வாகத்தினர் தற்போது ஆலய வளாகத்திலேயே குழாய்க் கிணறு ஒன்றினை அமைப்பதற்கு தயாராக இருக்கின்றனர்.

எனவே ஆலய வளாகத்தில் குழாய்க் கிணறு அமைப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டும். அதேவேளை, குறித்த வெடுக்குநாறிமலை அமைந்துள்ள பகுதி தற்போது வன வளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. எனவே ஆலய வளாகம் வனவளத் திணைக்களத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

குறித்த ஆலயம் பதிவு செய்வதற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

மலை உச்சியிலுள்ள சிவலிங்கத்தின் மேலாக ஏற்கனவே இருந்ததைப் போல சிறிய அளவிலான பாதுகாப்புக் கூடாரம் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (நி-8-250)

## கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை அமைப்பதில் அசண்டையீனம்

### விசனம் வெளியிட்ட மக்கள்

(வவுனியா)

வவுனியாவில் பெரும் காடுகளில் ஏக்கர் கணக்கான காணிகளில் இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர். ஆனால் கால்நடைகளிற்கான மேய்ச்சல் தரை அமைப்பதில் மாத்திரம் திணைக்களங்கள் அக்கறையில்லாமல் செயற்படுவதாக வவுனியா ஒருங்கிணைப்பு குழுவில் சுட்டிக்காட்டப்பட்டது.


வவுனியா பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதன் போது வவுனியாவில் மேய்ச்சல் தரை இல்லாமல் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் மழை காலங்களில் அதன் நிலைமை மேலும் மோசமடைவதுடன் பால் உற்பத்தியும் வீழ்ச்சியடையும் நிலை காணப்படுகின்றது.

இராணுவம் பெரும் காடுகளில் பல ஏக்கர் கணக்கான காணிகளைப் பிடித்து முகாம் அமைத்துள்ளது. ஆனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை வழங்குவதில் அதிகாரிகள் பின்னடிப்பதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குளத்தின் அலைகரைப் பகுதிகளில் மேய்ச்சல் தரை அமைப்பது தொடர்பாக ஆராயுமாறும் அரச காணிகளை அடாத்தாக பிடித்து வைத்திருக்கும் நபர்களிடம் இருந்து அந்த காணிகளைப் பறித்து மேய்ச்சல் தரை அமைப்பது தொடர்பாக பரிசீலிக்க முடியும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் இதன்போது தெரிவித்திருந்தார். (நி-8-250)

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம்



(வவுனியா)

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது. போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா தபால் நிலையம் முன்பாக இப் போராட்டம் இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் புலிகளின் மீள் உருவாக்கத்திற்கு உதவியதாக கூறி தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியே இப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் மதத்தலைவர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். (நி-8-250)

யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரிலும்..

மேற்கத்தைய நாடுகளில் கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

IELTS Academic / General / Ukvi

- மாணவர்கள் 6.5 band Score பெறுவதற்கு 100% உத்தரவாதம்.

- IELTS, IELTS Ukvi பரீட்சைகள் British College இல் நடைபெறும்.
- முழுநேர வகுப்புக்கள் மற்றும் பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

BRITISH COLLEGE Of Education

More information 0777- 695605

23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

Nelliyady. Tel : 021-7284200
Kilinochchi. Tel : 021-4927114
Vavuniya. Tel : 024 -4930041
Vavuniya 2nd Tel : 024-4930042
Puthukkudiyiruppu. Tel : 021-2290933
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Kalmunai. Tel : 067-4300207
Mullaithivu.. Tel : 021-7284344
Mannar. Tel : 021-4332294

IDP IELTS, Ukvi Exam centre (681)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 473

Viber 076 636 3378



# ஜனாதிபதியின் இந்திய விஜயம் போர்க்கொடி தூக்கும் எதிர்க்கட்சிகள்





அபிமன்யு

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் எதிர்க்கட்சிகளுக்கு பெரும் தீனியாக அமைந்துள்ளது.

அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எந்த நூலைப் பிடிக்கலாம் என காத்திருந்த எதிர்க்கட்சியினர், அநுர குமார திஸாநாயக்காவின் இந்திய விஜயத்தைப் பிடித்து அதனூடாக பிரச்சினை எழுப்பியிருக்கின்றனர்.

இலங்கை இறையாண்மையுள்ள நாடாக இருந்தாலும் உலக நாடுகள் பல இலங்கை மீது கரிசனை காட்டினாலும் இலங்கையின் அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மை இந்தியா, சீனாவின் கைகளிலேயே இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதனாலேயே இலங்கையின் ஆட்சியாளர்களின் வெளிநாட்டு விஜயங்களில் இந்திய, சீனா விஜயங்கள் மிகப் பிரபல்யமாக, பலராலும் அவதானிக்கப்படுகின்ற, இலங்கை அரசியல் தளத்தில் பரபரப்பான விஜயமாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயமும் கருதப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தி தேர்தலில் வெற்றியீட்டி அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றவுடன் முதல் வாழ்த்து இந்தியாவிடமிருந்தே வந்தது. அதேபோல முதலாவது அழைப்பும் இந்தியாவிடமிருந்தே வந்தது. ஆம், ஜனாதிபதி அநுரவை இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு இந்தியா அழைத்திருந்தது. அதை ஜனாதிபதியும் ஆமோதித்திருந்தார்.

மேற்குறித்த இந்தியாவின் அழைப்பே தற்போதைய ஜனாதிபதியின் இந்திய விஜயமாகும்.

**"பேரினவாத அரசுகள் தமிழருக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைத்தாலும் அதை தவறாகச்சித்தரித்து சிங்களமக்களை திசை திருப்பும் செயலை இனவாதிகள் மேற்கொள்வர். இந்த இடியப்பச் சிக்கலை நீக்கவல்ல சூத்திரம் இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்திடமே உண்டு.**

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்ட நெடும் இதிகாச புராண வரலாறுகள் காணப்பட்டிருந்தாலும் இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் சிங்கள மக்கள் மத்தியில் இன்று வரை தவறான புரிதலையே ஏற்படுத்தியிருக்கிறது.

தவிர, கச்சதீவுப் பிரச்சினை மிகப்பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது. இந்தியா கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுத்ததாகவும் அதை இந்தியா மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலர் தொடர்ந்து கோரிக்கை வெளியிட்டு வருவதுடன் இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினையும் அதை இன்னும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.

அநுரவின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து தி.மு.க செயற்குழுக்கூட்டம் நடைபெற்ற நிலையில் கச்சதீவை மீண்டும் இந்தியா பெற்றுக்கொள்ள வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியமை இலங்கையின் எதிர்க்கட்சியினருக்கு மேலும் தீனி போடுவதாய் அமைந்துள்ளது.

தி.மு.க வின் குறித்த தீர்மானத்தை அடுத்து சரத்வீரசேகர உள்ளிட்ட இனவாதிகள் பலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கி விட்டனர்.

கச்சதீவை இந்தியா மீளக் கோரவில்லை. எதிர்க்கட்சிகளின் கபடநாடகம் ஒரு நாளும் மக்களிடம் எடுபடாது என அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளுடன் அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டங்களை உடன் வெளியிட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்ற அமர்வில் வெளிநாடுகளுடன் அநுர அரசு மேற்கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் காரசாரமான விவாதங்களை நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் எழுந்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைக் குறைத்தமைக்கு எதிர்த்தரப்பினர் கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகவும் அவருக்கு உடன் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்றும் மகிந்த அணி கோரிக்கை விடுத்ததுடன், அவரின் பாதுகாப்புக் குறைப்பை திசை திருப்பும் வகையிலான கருத்துக்களைப் பரப்புகின்றனர்.

அதாவது புலிகளை அழித்த மகிந்தவின் பாதுகாப்பைக் குறைத்தால் மகிந்தவின் உயிருக்கு புலிகளினால் ஆபத்து இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இதில் ஒருபடி மேலே சென்ற சுமணரத்ன தேரர் புலிகள் காடுமாறினாலும் அதில் உள்ள புள்ளிகள் மாறாது என்றும் தற்போதைய அரசாங்கம் வடகிழக்கில் படைமுகாம்களை அகற்றி வருகின்றது. அங்கு இவ்வாறு வழங்கப்படும் சுதந்திரம் தவறாகப் பயன்படுத்த சூழ்ச்சி நடக்கலாம் என அரசுக்கு அறிவுரை கூறியிருக்கிறார்.

பயங்கரவாதம் பூண்டோடு அழிக்கப்பட்டதாய் அறிவிக்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்து விட்டன.

இப்போது பயங்கரவாத உருவாக்கம் தொடர்பில் பேசுவதற்குள் இருக்கும் பொருள் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

படைமுகாம்களை அகற்றி தமிழ் மக்களுக்கு கொடுக்கின்ற சுதந்திரம் தவறான பாதையில் செல்லும் எனக் கூறுவதற்குள் இருக்கும் இனவண்மத்தை என்னவென்று கூறிவிடமுடியும்.

இங்குதான் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது இலங்கை ஆட்சியாளர்களாலோ, பேரினவாத சக்திகளாலோ ஒரு நாளும் சிறுபாண்மைத் தமிழினத்திற்கு நீதியான தீர்வைப் பெற்றுத் தர முடியாது.

பேரினவாத அரசுகள் தமிழருக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைத்தாலும் அதை தவறாகச் சித்தரித்து சிங்கள மக்களை குழப்பும் வேலையை இனவாதிகள் மேற்கொள்வர்.

இந்த இடியப்பச் சிக்கலை நீக்கவல்ல சூத்திரம் இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்திடமே உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் சந்தியாப்பிள்ளை அன்ரன் செல்வராஜா அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த துயரடைகின்றோம். நெல்லியடியில் மொடேர்ன் என்ற புத்தகசாலையை ஆரம்பித்து அதனை மிகச் சிறப்பாக நடத்தியதுடன் பத்திரிகை முகவராகவும் இருந்தவர்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.


தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார். நீர்வேலியைச் சேர்ந்த மிகச் சிறந்த சமூக சேவையாளரும் எழுத்தாளருமாகிய கலாபூசணம் பரராசசிங்கம் அவர்கள் காலமாகி விட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

சமூக சேவையில் முன்னின்று உழைத்த பரராஜசிங்கம் நீர்வேலி மண்ணின் பெருமையை புத்தகமாக எழுதியவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோமெனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:**-எங்கட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில ஏற்படுகிற தேவையில்லாத குழப்பங்களைத் தவிர்க்க ஏலாதோ.

**மூப்பர்:**-ஏன் தவிர்க்க முடியாது. எதுவும் திட்டமிட்டு நடக்கும் போது அதைத் தடுப்பது தான் கடினமே தவிர, மற்றும் படி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் தலைவர் நினைத்தால் தேவையற்ற குழப்பங்களைக் கட்டுப்படுத்த முடியும்.



சந்தியாப்பிள்ளை அன்ரன் செல்வராஜா



தர்மலிங்கம் பரராசசிங்கம்

**சாத்திரியார்:**- ஓ! நாங்களும் எங்கட தனிப்பட்ட பகையைத் தானே சாதிக்க நினைக்கிறம்.

**கங்காணி:**- என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:**- மருத்துவத்துறை பற்றிக் கதைக்கிற, டாக்குத்தர் எம்.பியின்ர நோக்கம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின்ர பணிப்பாளரை மாற்றுவதாகத் தான் இருக்குது.

ஆனால் நீங்கள் அவதானித்துப் பார்த்தால் தெரியும் யாழ்ப்பாணத்தில உள்ள தனியார் வைத்தியசாலைகளையோ அல்லது அவற்றின் நிர்வாகங்களையோ அவர் ஒரு போதும் குறைசொல்லவில்லை.

உண்மையில மருத்துவத்துறையில நடக்கிற அநீதியை எதிர்த்துக் குரல் கொடுக்கிறதாக இருந்தால், ஒவ்வொரு மருத்துவ சேவைக்குமான கட்டணங்கள் எவ்வளவு. யாழ்ப்பாணத்தில உள்ள தனியார் வைத்தியசாலைகள் அறவிடுகின்ற மருத்துவக் கட்டணங்கள் எப்படியாக இருக்குது.

அதே கட்டணம் கொழும்பில் எப்படியாக உள்ளது. என்பது பற்றியெல்லாம் அந்த டாக்குத்தர் எம்.பி எடுத்துக் கூற வேணும். ஆனால் அவர் ஒரு போதும் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் வைத்தியசாலைகள் பற்றி வாய்திறக்கவே இல்லை.

**வாத்தியார்:**- என்னவாக இருந்தாலும் தர்மத்தின் அடிப்படையில செயற்பட்டால் தான் எதுவும் நிலைத்து நிற்கும். இல்லையெண்டால் எல்லாம் திருவிழாக் காலத்துக் கடையளின்ர நிலைதான்.

வாத்தியார் இவ்வாறு கூறியதும் ஆலடி மௌனமாகியது. மௌனத்தைக் குலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:**- யாழ். போதனா வைத்தியசாலையில பணியாற்றுகிற சுகாதார ஊழியர்களை டாக்குத்தர் எம்.பி கொழும்புக்குக் கூட்டிக் கொண்டு போய் சுகாதார அமைச்சரைச் சந்திக்க வைத்திருக்கிறார். அது ஒரு நல்ல வேலை தானே.



## எப்போதும் மக்கள் சமூகம் விழிப்போடு இருக்க வேணும்

**வாத்தியார்:**- அது தான். சிலதை அரசியல்வாதிகளால செய்ய முடியும். சிலதை அரச அதிகாரிகளால செய்ய முடியும்.

சிலதை மக்கள் சமூகம் தான் செய்ய முடியும். இன்னும் புலம்பெயர் மக்களால் செய்யக் கூடியதும் இருக்குது.

அந்த வகையில ஒரு வைத்தியசாலைப் பணிப்பாளர் சுகாதார ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் எடுத்துக் கொடுக்கிறதென்பது பெரிதளவாக வெற்றியளிக்காது.

அதேநேரம் அதை ஒரு எம்.பி அல்லது அமைச்சர் முன்னெடுப்பாராயின் அதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாகவே இருக்கும்.

தவிர, சம்பந்தப்பட்ட பிரச்சினையை பாராளுமன்றத்தில கதைக்கிற வாய்ப்பும் அவர்களுக்கு இருக்குது.

இதுபோல பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் பட்டப்படிப்புகள் சார்ந்த விடயங்களில எங்கட மக்கள் சமூகத்திற்கு உதவ முடியும்.

**பண்டிதர்:**- வாத்தியார் சொல்லுறது உண்மை தான்.

அந்தநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில வெளிவாரிப் பட்டப் படிப்பைக் கொண்டு வந்தார்.

அதற்கு அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா அவர்கள் அனுமதி வழங்கினார்.

இருந்தும் பல்கலைக் கழக சமூகத்தில அதற்குச் சிலஎதிர்ப்புகளும் இருந்தன.

ஆயினும் வெளிவாரிப் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப் பட்டதால, அது எங்கட பிள்ளைகள் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக இருந்தது.

அந்தக் காலத்தில தனியார் கல்வி நிறுவனங்களில தான் பட்டப்படிப்புக்கான விரிவுரைகள் இடம்பெற்றன.

ஆனால் இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கான விரிவுரைகள் இடம்பெறுகின்றன.

அண்டைக்கு பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பித்ததால இன்று அது எங்கட பிள்ளைகள் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்குப் பெருந்துணையாக அமைந்திருக்குது.

ஆனால் இந்தத் திட்டத்தை ஒரு எம்.பியால, ஒரு அமைச்சரால செய்ய முடியாது.

அதால தான் சொல்லுறன் அவரவரால முடிந்த காரியங்களை அவரவர்கள் செய்தாகவேணும்.

**மூப்பர்:**- தெரியாமல் தான் கேட்கிறன் வாத்தியார், மக்கள் சமூகத்தால என்ன செய்ய முடியும்.

**வாத்தியார்:**-63 இலட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மக்கள் ஓட ஓடத் துரத்தினவிய எல்லோ.

அதுபோல பொருத்த மற்ற அதிகாரிகள், பொருத்தமற்ற அரசியல்வாதிகள், பொருத்தமற்ற வேலைத் திட்டங்கள், சமய, சமூக நல்லிணக்கத்திற்கு எதிரான பிரசாரங்கள் மற்றும் செயற்பாடுகள் இவற்றையெல்லாம் மக்கள் சமூகம் எதிர்க்க வேணும்.

அப்படி மக்கள் சமூகம் எதிர்க்குமாக இருந்தால், எல்லோரும் தத்தம் பணிகளை மிகச் சிறப்பாக மேற்கொள்ளுவினம்.

**சாத்திரியார்:**- உண்மை தான். கடந்த சில நாட்களுக்கு முன்னதாக யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சுற்றியுள்ள தமிழ் மன்னர்களின் சிலைகளை மூடி மறைத்து, அதில வர்ண வெளிச்சங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

இதனை அவதானித்த ஓர் அமைப்பு யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வர, ஆணையாளர் உடனடியாக நடவடிக்கை எடுத்து, தமிழ் மன்னர்களின் சிலைகளுக்கான கௌரவத்தைப் பாதுகாத்தார்.

**வாத்தியார்:**- அது தான் எப்பவும் மக்கள் விழிப்பாக இருக்க வேணும்.

ஒருமையில கதைக்கிற- பொது மக்களை அலைக்கழிக்கிற- பழி வாங்குகிற- வேண்டுமென்றே நிவாரணங்களை வெட்டுகிற உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களிட்ட நிலைமையை எடுத்துக்கூறி அவர்களைத் திருத்த வேணும்.

இல்லையெண்டால், உரிய அதிகாரிகளிட்ட முறையிட்டு அவயளை இடமாற்ற வேணும்.

அதேநேரம் பொது மக்களுக்கான சேவையை அர்ப்பணிப்போடு ஆற்றுகின்ற உத்தியோகத்தர்களைப் போற்றவும் அவர்களைக் கௌரவிக்கவும் மக்கள் சமூகம் தவறக்கூடாது.


அப்படிச் செய்தால் தான் எங்கட நோக்கம் உச்ச பயனைத் தரும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்டம் ஏற்றுவதை பெற்றோர்கள் தடுப்பது ஏன் வியாசரே?

**தவராசன் — கொற்றாவத்தை**

**வாயினால் புகைவிடும் பிராணி என்னவென்று சொல்ல முடியுமா வியாசரே?**

எனக்குத் தெரிய வாயினால் புகை விடும் ஒரே ஒரு பிராணி மனித பிராணி மட்டுமே.

அந்தப் புகைதான் அவனுக்குப் பகை என்பதைக் கூடத் தெரியாமல் இழு த்து இழுத்து புகை விட்டு தன்னையும் அழித்து தன் வாழ்வையும் அழித்து தன்னைச்சுற்றி இருக்கும் சமூகத்தையும் அழிக்கும் இந்த மனித பிராணி திருந்தாவிடின் உலகம் முற்றும் புகை மண்டலமாக மாறும்.

புகை உயிரைக் குடிக்கும் என்று தெரிந்தும் அதில் சுகம் காணும் மனிதனுக்கு ஆறறிவு உண்டா என்பது சந்தேகமே.

**தரணிகன் — சாவகச்சேரி**

**அநுரவின் ஆட்சி இலங்கையை நல்லதொரு நாடாக மாற்றுமா வியாசரே ?**

அநுரவின் தாயாருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு அவர் அரச மருத்துவ மனையில் சாதாரண மருத்துவ விடுதியில் இருக்க ஜனாதிபதி அவரை அங்கு சென்று சந்தித்த புகைப்படங்கள் நல்ல சகுனத்தைக் காட்டி நிற்கின்றது.

இங்கு நான் பெரிது, நீ பெரிது என்ற பேதம் ஏதுமில்லை என்ற மனநிலை ஒரு தலைவனிடம் இருக்குமாயின் நிச்சயம் அது மக்களையும் மாற்றும்.

**குமார் — யாழ்ப்பாணம்**

**தமிழரசுக் கட்சிக்கு இந்த நிலை, ஏன் என்று கூற முடியுமா வியாசரே?**

என்ன செய்வது ஊழ்வினைப் பயன் தமிழரசுக் கட்சியை உருக்குலைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழரசுக் கட்சி நினைத்திருந்தால் என்றைக்கோ தமிழினத்திற்கு நீதி கிடைத்திருக்கும். அந்த நீதியினூடே இப்போது தமிழினம் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கும்.

அதை விரும்பாமல் அரசுக்கு ஆதரவு கொடுப்பதும் எதிர்ப்பது போல் எதிர்த்து மறைமுக ஆதரவு கொடுப்பதும் என்ற போலி முகம் தமிழினத்தை கருவறுத்து விட்டது என்பதே மெய்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில்**
**தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு**
**SMS,**
**Whats app செய்யுங்கள்**

**ஜெ.பிரணாப் — பருத்தித்துறை**

**பரீசை நெருங்கி வர பயமாக இருக்கிறதே வியாசரே?**

பயம் தோல்வியையே பரிசாய்த் தரும். அவர் பலம் மிக்க, எவராலும் வீழ்த்த முடியாத குத்துச் சண்டை வீரர். அவரை ஒரு இளவயது வீரன் எதிர்கொள்ளத் தயாரானான். அவரை வீழ்த்த முடியாது என்பது அவனுக்கு நன்கு தெரியும்.

தனதுநண்பர்கள்மூவரை அவரிடம் அனுப்பி வைத்தான். அவரிடம் சென்ற ஒரு நண்பன் என்ன வழமையை விட இன்று உங்களுக்கு மூச்சு வாங்குவது போல இருக்கிறதே என்றான்.

அவரைச் சந்தித்த மற்றையவர் என்னது வழமையை விட உங்கள் ஓட்டம் வேகம் குறைந்திருக்கிறதே ஏன்? என்றான்.

மூன்றாவது நபர் போட்டி தொடங்குவதற்கு சற்று நேரத்திற்கு முன் அவரைச் சந்தித்து, அவருக்கு கைலாகு கொடுத்துவிட்டு, வழமையாய் உங்கள் பிடி இரும்புப்பிடியாய் இருக்கும். இப்போது அப்படி இல்லையே ஏன் என்றான்.

அவ்வளவுதான் அவரின் தன்னம்பிக்கை பறந்து போனது. அந்தப் புகழ் பூத்த, யாராலும் வெல்ல முடியாத குத்துச் சண்டை வீரரை இளம் போட்டியாளர், ஒரு குத்தில் வீழ்த்தி விட்டான்.



பரீட்சை நெருங்கி வர பயமாக இருக்கிறதே வியாசரே?

**மதுவன் — மீசாலை**

**வீதிகளிலும் சந்திகளிலும் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடும் இளைஞர்கள் தொடர்பில்?**

இப்படிப்பட்ட தவறுகளைப் பார்க்கும் போது இறைவா இப்போது 2009 இற்கு முற்பட்ட காலத்தை ஏற்படுத்தி தருவாயா என்று மனம் ஏங்கும்.

அந்தளவிற்கு எமது இளம் சமூகம் தறிகெட்டுத் திரிகிறது.

இருக்க வேண்டியவர்கள் இருந்திருந்தால் இவர்கள் இப்படி தறுதலை வேலை பார்ப்பார்களா? எல்லாம் தமிழினத்தின் விதி என்று இறைவனை நோவதை விட வேறு எதைச் செய்து விட முடியும்.

**சுதன் — குப்பிழான்**

**அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் பொதுமக்களுக்கு, ஊடகங்களுக்கு அனுமதி இல்லை எனின் அந்த அபிவிருத்தி மக்களிற்கானதாய் இருக்குமா வியாசரே?**

அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதுடன் அந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யக் கூடியதாய் இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட மிக முக்கியமான கலந்துரையாடல்களில் சில தனிநபர்கள் குழப்பங்களை விளைவித்தால் இதைத் தவிர வேறு எதைச் செய்ய முடியும்?

தமது அரசியல் இருப்புக்காகவும் தமது பிரபல்யத்திற்காகவும் ஒரு சிறு பிரச்சினையைத் தூக்கிப்பிடித்து அதை ஊதிப் பெரிதாக்கினால் அன்றைய நாளில் வேறு எதையும் பேச முடியாது போய் விடுமே.

**பிரவீஸ் — பருத்தித்துறை**

**பட்டம் ஏற்றுவதை பெற்றோர்கள் தடுப்பது ஏன் வியாசரே?**

பட்டம் ஏற்றிய போது கிணற்றில் தவறி வீழ்ந்த சிறுவன் பலி என்ற செய்தி அடிக்கடி பத்திரிகைகளில் பார்த்ததுண்டல்லவா?

பெற்றோர்களின் எதிர்ப்பிற்கும் பயத்திற்கும் இதுவே காரணம்.

ஆயினும் வல்வெட்டித்துறை பட்டத்திருவிழா பெற்றோரின் அந்த எதிர்ப்பை ஒழித்து விட்டது.

ஆம், வல்வை பட்டத்திருவிழாவில் ஏற்றப்படும் பட்டங்கள் ஒவ்வொன்றும் மிகப் பிரபல்யம் ஆனவை.

அவை சாதாரண சிந்தனையைத் தவிர்த்து எந்திரவியல் முறைமை புகுத்தப்பட்டிருக்கின்றமை வியப்பிற்கும் பெருமைக்குமுரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



39 செங்கை ஆழியான்

இவ்வளவு வரலாற்று நிகழ்ச்சிகளையும் யாழ்ப்பாணக் கோட்டை உள்வாங்கி நிமிர்ந்து நின்றது. அதன் அமைதியையும் யாழ்ப்பாண மக்களது நிம்மதியையும் குலைக்கின்ற நிகழ்ச்சி 1961 ஆம் ஆண்டு நிகழ்ந்தேறியது.

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் யாழ்ப்பாணம், வவுனியா. திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டக் கச்சேரிகளின் முன் குழுமி நிர்வாகம் நடைபெறாது தடுத்து, சாத்வீக முறையில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர். தமிழ்ப் பிரதேசத்தின் மக்களனைவரும் உணர்வு பூர்வமாக இதில் கலந்து கொண்டனர். தமிழ் மக்களின் சுய அரசாட்சியை வலியுறுத்தும் குறியீடாக தமிழரசு தபாற் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இச் சத்தியாக்கிரகம் 18. ஏப்ரல் 1961 வரை பெரும் இயக்கமாக நிகழ்ந்தது.

இதனை முறியடிப்பதற்காக இராணுவம் முதன் முதலாக வடக்கே அனுப்பப்பட்டு நிலை கொண்டது.

1961 மார்ச் 01 ஆம் திகதி பலாலி விமான நிலையத்தில் ஸ்ரீலங்கா இராணுவ வீரர்கள் இறக்கப்பட்டனர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசு இரத்மலான விமானத் தளத்திலிருந்து இராணுவ வீரர்களை அனுப்பிவைத்திருந்தது. கடற்படை கப்ரின் ராஜன் கதிர்காமர் தலைமையிலும் பிரதிப் பொலீஸ்மா அதிபர் வன்டென்பேர்க் தலைமையிலும் கடற்படையினரும் பொலிஸாரும் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டனர்

02. மார்ச், 1961 அதிகாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மெயில் றெயினில் கேர்னல் உடுகம தலைமையில் இன்னொரு தொகுதி இராணுவம் வந்து இறங்கியது. இவர்கள் உடனடியாக யாழ்ப்பாணக் கோட்டைக்கு வந்து தங்கினர். 17. ஏப்பிரல். 1961 காலை வேளையில் 350 இராணுவ வீரர்களையும் 15 இராணுவ அதிகாரிகளையும் சுமந்தபடி ஒரு விசேஷ புகையிரதம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. இவர்களோடு கோட்டையில் ஏறத்தாழ 600 இராணுவ வீரர்கள் சேர்ந்து விட்டனர். 18, ஏப்ரல் அதிகாலை சத்தியாக்கிரகிகள் அடித்து, உதைத்து, தாக்கப்பட்டு அப் புறப்படுத்தப்பட்டனர். அன்றிலிருந்து இரு நாட்கள் ஊரடங்குச் சட்டம் பிரகடணப்பட்டு, யாழ்ப்பாணப் பொது மக்கள் பலர் தாக்கப்பட்டனர். சமஷ்டிக் கட்சிப் பாராளுமன்றப் பிரதிநிதிகளும், முக்கிய ஆதரவாளர்களும் இரவோடிரவாகக் கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். அன்று யாழ்ப்பாணக் கோட்டைக்கு வந்த ஸ்ரீலங்கா இராணுவம் பின்னர் தொடர்ந்து அங்கு அடிக்கடி முகாமிட்டுக் கொண்டது. (தொடரும்..)

---

# கடல் புறா

## முள்ளை முள்ளால் எடுக்கலாம்




காலத்தின் பதிவு 134

"அதை எதற்கு உபயோகப்படுத்துகிறாய்? பூட்டின் வாயமைப்பு எடுத்து..." என்று ஏதோ சொல்லப்போன கூலவாணிகன் முகத்தில் பெரும் கிலி படர்ந்தது. திடீரெனத் திகைத்த அவன், பலவர்மன் கழுத்துச் சாவியில் மெழுகை அமர்த்தி..." என்று ஆரம்பித்து மேலே சொல்ல முடியாமல் திகைத்தான்.

கழுத்துச் சாவியில் மெழுகை ஒட்டி அமைப்பு எடுத்துக்கொள். அதை வார்ப்படக்காரனிடம் கொடுத்து .சாவி ஒன்று செய் என்றான் படைத்தலைவன்.

இத்தனைக்கும் கழுத்தைக் காட்டிக் கொண்டிருப்பானா பலவர்மன்?" என்று வினவினான் சேந்தன். உம் காட்டிக் கொண்டிருப்பான். இன்றிரவே அந்தப் பணியைச் செய்! கூலவாணிகன் முகத்தில் பெரும் திகில் படர்ந்தது. முடியாது. என்னால் முடியாது. பெரும் ஆபத்து. என் தலை போய்விடும் என்று கதறினான்.

இளையபல்லவன் மிகுந்த நிதானத்துடன் கூல வாணிகனைச் சில விநாடிகள் நோக்கினான். பிறகு அவன் காதுக்கருகில் குனிந்து "சேந்தா! இன்றிரவு பலவர்மன் அந்தரங்க அறைக்குள் செல். உனக்கு எந்தவித எதிர்ப்பும் இருக்காது. மெழுகைச் சாவியில் ஒத்தி எடுத்துக்கொள். அவசரப்படாதே. நிதானமாகச் செய். மெழுகின் அமைப்பு சிறிது தப்பினாலும் அந்தப் பெட்டியைத் திறக்க முடியாது. அந்தப் பெட்டியில் பெரும் செல்வம் இருக்கிறது. அந்தச் செல்வம் எனக்கு வேண்டும் என்றான்.

கூலவாணிகன் கைகால்கள் நடுங்கின. பலவர்மன் கொடியவன், வஞ்சகன், என்று கலக்கத்துடனும் நடுக்கத்துடனும் சொற்களை உதிர்த்தான் சேந்தன்.


"வஞ்சகத்தை வஞ்சகத்தால் வெல்ல வேண்டும். முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்," என்ற இளைய பல்லவன் குரல் திடமாக இருந்தது. "இன்று நள்ளிரவில் அந்த அறையில் நுழைந்துவிடு. புரிகிறதா," என்ற படைத்தலைவன் உத்தரவும் கெடுபிடியுடனிருந்தது.

அந்த உத்தரவைப் பெற்ற சேந்தன் பெரும் கலக்கத்துடனும், வேதனையுடனும் தன் இருப்பிடம் சென்றான்.அன்றைய பொழுது வழக்கத்துக்கு விரோதமாக வெகு வேகத்துடன் ஓடியது. நள்ளிரவில் மெல்ல மெல்ல நடந்தான் கூலவாணிகன் பலவர்மன் அறையை நோக்கி.

வழியிலோ அறைவாயிலிலோ காவலர் இல்லை. ஏன் இல்லையென்பதற்கு மாடியில் கேட்ட இளையபல்லவன் குடி வெறிக்கூச்சலும் காவலர் கும்மாளமும் விளக்கம் காட்டின. காவலர் இல்லை என்ற தைரியத்தால் மெல்ல உள்ளே நுழைந்த சேந்தன் அறையில் இருந்த கோரக் காட்சியைக் கண்டு [illegible] நிலை குலைந்து போனான். பலவர்மன் ஒரு மஞ்சத்தின் மீது குப்புற விழுந்து கிடந்தான். அவன் முதுகு பூராவும் செங்குருதி ஓடியிருந்தது. அந்தக் குருதி அறையின் மங்கலான விளக்கொளியில் மிகப் பயங்கரமாகத் தெரிந்தது. சுவரிலிருந்த படங்கள் வேறு அந்த பயங் கரத்தை அதிகப்படுத்தின. அந்தக் காட்சியின் பயங்கரத்தால் கை, கால் வெலவெலக்க, மார்பு துடி துடிக்க, உடல் வியர்க்க, திரும்பி ஓடிவிட எத்தனித்தான் கூலவாணிகன். அறை மூலையிலிருந்து கிளம்பிய "நில்" என்ற சொல் கூல வாணிகன் கிலியை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றது. கால்கள் நடுங்க, உணர்ச்சிகள் சிதறியோட, சொல்லவொண்ணாப் பயம்பிடித்து வாட்ட, நின்ற இடத்திலேயே நின்ற கூலவாணிகன் அந்தச் சொல் வந்த திசையில் கண்களை ஓடவிட்டான். அறையின் இருண்ட மூலையிருந்து அவனை நோக்கி ஓர் உருவம் அசைந்து அசைந்து மெல்ல மெல்ல நடந்து வந்தது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளியலில் ஒளிந்திருக்கிறது அழகும் ஆரோக்கியமும்.!



சரும பராமரிப்பு என்பது சருமத்தை வெள்ளை வெளேரென்று மாற்றுவது கிடையாது. உங்களுடைய ஒரிஜினலான நிறத்தை பிளாக் ஹெட், ஒயிட் ஹெட், டெட் செல் என எந்த மாசு மருவும் இல்லாமல் ரோஜாவின் ஒற்றை இதழ்போல மென்மையாக வெளிப்படுத்துவதுதான். இப்படிப்பட்ட சருமத்தை நீங்களும் பெறுவதற்கு இயற்கை வழிகள் சொல்லித் தருகிறார் ஆயுர்வேத காஸ்மெட்டாலஜிஸ்ட் ரேகா ராவ்.

சரும அழகுக்கு முதல் எதிரி மலச்சிக்கல். தினமும் இரவு உணவுக்குப் பிறகு கண்டிப்பாக ஒரு துண்டு பப்பாளிப்பழம் சாப்பிட உடம்பின் உள்ளே கழிவுகள் சேராது. உள்ளே சுத்தமாக இருந்தால் அது மெல்ல மெல்ல வெளிப்பகுதியிலும் எதிரொளிக்க ஆரம்பிக்கும். எத்தனை வேலைப்பளு இருந்தாலும் தண்ணீர் குடிக்க மறக்காதீர்கள். ஆரஞ்சு, சாத்துக்குடி, மாதுளை என்று தினமும் ஒரு பழம் கட்டாயம் சாப்பிடுங்கள். வீட்டில் பழமே இல்லையென்றால் லெமன் ஜுஸாவது தேன் கலந்து குடியுங்கள். ஒரு மாதத்திலேயே சரும பளபளப்பில் நல்ல வித்தியாசம் தெரியும்.

கடலை மா, அரிசி மா, பாசிப்பயறு மா மூன்றையும் சம அளவு எடுத்து, வெறும் தண்ணீரில் கலந்து பேக் போல ரெடி செய்யுங்கள். முகம், கழுத்து என்று எங்கெல்லாம் சருமம் தளர்ந்துபோய் இருக்கிறதோ அங்கெல்லாம் தேய்த்து 20 நிமிடம் ஊற வைத்து குளியுங்கள். சருமம் இறுக்கமாக ஆரம்பிக்கும். அரிசி மாவும் பாசிப்பயறு மாவும் கிடைக்கவில்லை என்றாலும் கடலை மாவிலாவது பேக் போடுங்கள். கடலை மாவுக்கு சருமத்தை இறுக்கமாக்கும் தன்மை அதிகம்.

காலையில் எழுந்ததில் இருந்து அரை மணி நேரத்துக்குள் குளிப்பது மட்டுமே சருமத்தின் இறந்த செல்களை நீக்குவதற்கான முறையான வழி. ஏனென்றால், நம் உடலில் இரவு 11 மணியில் இருந்து ஒவ்வொரு உறுப்பாக கழிவு நீக்க வேலையை செய்ய ஆரம்பிக்கும். இதில் கடைசியாக காலையில் கழிவுகளை நீக்குகிற உறுப்பு சருமம். அதனால் கண் விழித்த சிறிது நேரத்துக்குள் குளித்துவிட்டால் இறந்த செல்கள் அத்தனையும் வெளியேறி விடும். அழகு, ஆரோக்கியம் இரண்டையும் காலை நேர குளியல் தரும். தவிர, நகச்சூடு அளவுள்ள தண்ணீர் தான் சருமத் துவாரங்களை மென்மையாகத் திறந்து இறந்த செல்களை வெளியேற்றுவதோடு, மறுபடியும் துவாரங்களை மூடவும் செய்யும். அதிகமாக சூடுள்ள தண்ணீர் சரும துவாரங்களைத் திறந்து இறந்த செல்களை வெளியேற்றுமே தவிர துவாரங்களை மறுபடியும் மூடாது. இதனால், சருமம் மெல்ல மெல்ல உலர்ந்து, தளர ஆரம்பிக்கும். இறந்த செல்களை வெளியேற்ற எங்களுக்கு இயற்கையான ஸ்கிரப்பரும் வேண்டும் என்பவர்கள் உலர்ந்த மாதுளைத் தோலை பாசிப்பயிறுடன் சேர்த்து அரைத்து, உடம்பில் தேய்த்துக் குளிக்கலாம். சருமத்தில் நமைச்சல் இருந்தால், கைப்பிடி வேப்ப இலை, துளசியிலை அல்லது ஒரு டீஸ்பூன் துளசிப் பொடி, அரை டீஸ்பூன் பூசு மஞ்சள் தூள் ஆகியவற்றை குளிக்கும் நீரில் போட்டு, காலையில் அந்தத் தண்ணீரில் குளித்து விடுங்கள்.

குளித்தவுடன் லேசான ஈர உடம்புடன் இருக்கும்போது, உடம்பில் சருமத் துவாரங்கள் திறந்திருக்கும். இந்த நேரத்தில் சிறிதளவு செக்கு தேங்காய் எண்ணெயைத் தடவி விட்டால், 3 நிமிடங்களில் எண்ணெய் சருமத்தினுள்ளே போய்விடும். இந்த இயற்கை மாய்ஸ்ரைசர் இரவு வரை தாங்கும்.




## சுமைதாங்கி

இந்த நவீன உலகத்திலே எல்லாம் மிசின் யுகம் ஆகிப் போச்சு. எப்ப எங்கட கலாசாரத்துக்குள்ள நவீனம் புகுந்ததோ, அண்டைக்கே மனிதனின்ர ஆரோக்கியம் கெட்டுப்போச்சு.

எதுக்கு எடுத்தாலும் மோட்டார் சைக்கிள எடுத்து காலுக்குள்ள வைக்கிற நிலைதான் இப்ப இருக்கிற நிலை.

உழைச்சு, களைச்சு வேலை செய்யிற ஆக்களை பார்க்கிறதெண்டால் குதிரைக் கொம்பாவெல்லோ இருக்கு.

மனிதன் எண்டால் வியர்வை வர உழைக்க வேணும். அப்பதான் உடம்பு ஆரோக்கியமா இருக்கும். நோய்கள் அண்டாது. தொண்ணூறு - நூறு வயது வரைக்கும் ஆரோக்கியமா வாழலாம்.

இப்ப இருக்கிற சமூகத்துக்கு உழைப்பும் தெரியாது, களைப்பும் தெரியாது.

ஏதோ ஏசியாம். அதைப்பூட்டி விட்டால் வியர்க்காதாம் எண்டு வருத்தங்களை விலை கொடுத்து வாங்கி ஆரோக்கியத்தையும் ஆயுளையும் குறைக்குதுகள் எண்டு நினைக்க மனம் பதைபதைக்குது.

முற்காலத்தில வாகனப் போக்குவரத்து ஏதும் இல்லை. மாட்டு வண்டிப் பாவனை இருந்தது. அதுவும் அரிதானதாகத் தான் இருக்கும்.

என்ன தேவை எண்டாலும் சனம் தலையில சுமந்து கொண்டுதான் போகும். தோட்டத்தில விளைஞ்ச பொருட்களை சந்தைக்குக் கொண்டு போக, சந்தையில வாங்கின பொருட்களை வீட்டுக்கு கொண்டு வர எண்டு நெடுந்தூரத்துக்கே பொருட்களை தலைச்சுமையாத்தான் கொண்டு போவினம்.

இவர்கள் வழியில களை ஆறுவதற்காக ஆங்காங்கே சுமைதாங்கி இருக்கும்.

தலைச்சுமையாய் கொண்டு போற பொருட்களை மற்றாக்களின்ர உதவி இல்லாமல் சுமைதாங்கியில இறக்கி வைச்சிட்டு இளைப்பாறிட்டு திரும்பவும் மற்றாக்களின்ர உதவி இல்லாமல் தலையில தூக்க இந்த சுமைதாங்கி பெரிய உதவியா இருக்கும்.

இந்த சுமைதாங்கியள் இப்பவும் சில இடங்களில இருக்குது. முந்தி வீதியோரங்களில சுமைதாங்கிய காணலாம். ஆனா வீதி புனரமைப்பு, அகலிப்பு எண்டு எங்கட புராதன சொத்துக்களையெல்லாத்தையும் இடிச் சழிச்சிட்டினம்.

அந்த அழிப்புக்குள்ள இந்த சுமைதாங்கியும் அழிஞ்சு போச்சு.

இப்ப இருக்கிற பெற்றோரில எத்தின பேர் தங்கட பிள்ளைகளுக்கு எங்கட பழைமைகளைச் சொல்லிக் குடுக்கினம் எண்டு கேட்டால் விரல் விட்டுக்கூட எண்ண முடியாது.

ஆனால் எப்படியும் தங்கட பிள்ளையை டொக்டர், இஞ்சினியர் ஆக்கிப் போட வேணும் எண்டு ஓடித்திரியினம். பிள்ளைகளை வகுப்புக்கு அனுப்பிட்டு வீதியில நிண்டு அரட்டை அடிக்கினம், தொலைபேசிக்குள்ள மூழ்க்கி கிடக்கினம். இதுகள் எல்லாம் ஒருநாளும் விடிவைத் தராது.

என்னடா பேராண்டி விளங்கிச்சா? நீ பழைமைகளை படிக்க வேணும். தெரிஞ்சு கொள்ள வேணும். அதை மதிக்க வேணும். அதன்படி நடக்க வேணும். அப்படியெண்டால் தான் இந்தப் பாட்டியின்ர முத்தம் உனக்கு கிடைக்கும். (ஆச்சி வருவா...)

மாவை நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கறை இல்லாத எனக்கு...



ஓர் நாள்....!
நடு நிசி வேளை
வீட்டிற்குச் சென்றேன்
மூன்று பேர் கறுப்புத் துணியால்
முகத்தை மூடி பக்கத்து வீட்டின்
கதவைத் தட்டினர்
சயிக்கிளை நிறுத்தி
உற்று நோக்கினேன்
முறைத்துப் பார்த்த படி கூரிய
ஆயுதம் எடுத்தனர்
தனியனாக நான்,
எனக்கேன் வீண் வேலை
விலகிச் சென்றேன் !

மறுநாள்...!
அதிகாலை வேளை
ரியூசன் மாணவிகளிடம்
சேஸ்டை புரிந்தனர் சிலர்
எனக்கேன் வீண் வேலை
விலகிச் சென்றேன்...!

பிறிதொரு நாள்...!
மதிய வேளை
குடிபோதை மயக்கத்தில்
மனைவியை தாக்கினான் ஒருவன்
எனக்கேன் வீண் வேலை
விலகிச் சென்றேன்...!

இன்னொரு நாள்...!
மாலை வேளை
பொது வீதி ஓரத்தில்
கழிவுகள் கொட்டினர்
கொட்டாதீர் என் றுரைத்தால்
வம்புக்கு வருவர்
எனக்கேன் வீண் வேலை
விலகிச் சென்றேன் !

வே றோர் நாள்...!
அந்திமாலை வேளை
மோதிய வாகனம்
எங்கோ மறைய
துடி துடித்து கிடந்தான்
வீதியில் ஒருவன்
பொலிஸ் கேஸ், கோர்ட்
எனக்கேன் வீண் வேலை
விலகிச் சென்றேன்...!

ஓர் நாள்...!
நடு நிசி வேளை
என் வீட்டுக் கதவு
தட்டும் சத்தம் கேட்டது
சாளரம் ஊடு
உற்று நோக்கினேன்
மூன்று பேர் கறுப்புத் துணியால்
முகத்தை மூடியபடி...!
எனக்கேன் வீண் வேலை யென்று
விலகிப் போக முடியவில்லை.

**சாந்தையூரிவன்**

## மனைவி



என் வீடு என்று
பெருமையாகச் சொல்கிறேன்
எந்தப் பொருள் எங்கிருக்குமென
மனைவிக்கு மட்டுமே தெரியும்
இவ்வளவு சம்பளம் என்று
நிமிர்ந்து நடக்கிறேன்
வரவுசெலவு மீதமெல்லாம்
மனைவிக்கு மட்டுமே தெரியும்
எங்கு சென்றாலும்
என்னை முன்னால்
நடக்கச் செய்கிறாள்
முதுகில் யாரும் குத்தாமல்
மனைவி பின்னால் வருகிறாள்
பணி நிமித்தமாகப்
பிரிந்திருந்து பாருங்கள்
இருக்கும்பொழுதே
மனைவியைக் கொண்டாடுவீர்கள்.

**சாதிக்**

## மௌனத்தின் தேடல் 742



### சுனாமி

தலை மகன் தாயைக் காப்பான்
கடைக்குட்டி மானம் காப்பான் என்பது
சுனாமிக்கு தெரியுமா - அம்மா...?
அப்பாவும் அண்ணாவுமாக நானிருந்து
உனைக் காப்பேன் கண் கலங்காதே அம்மா.

**ரா.சமீரா (சாபி நகர் - யாழ்ப்பாணம்)**

### தாயிலும் சால...

விருத் தெரியா வயதிலும்
வியத்தகு அன்புப் பரிமாற்றம்
வறுமை வாட்டும் போது
பொறுமை காட்டும் தாய்க்கு
உனக்கென்றும் தானிருப்பதாய்
கண்ணீரைத் துடைக்கும் காட்சி
கல் நெஞ்சையும் கரைய வைக்கும்
நல் நெறிக்கும் வழி காட்டும்
மூன்று வயதுப் பெரு ஞானம்
என்றும் வருவதில்லைப் பலருக்கும்

**க.நாகராசா (நுணாவில்)**

### "பாலகனின் பரிதாப ஏக்கம்"

மகனே அன்னையின் விதி
காலத்தொட்டு விம்பிக் கொண்டாயா ?
துரோகிகளால் பார்வை இழக்கப்பட்டதா ?
அநியாய உலகை விழிகொண்டு
பார்க்க முடியவில்லை
அதனிலும் மேலாக மழலையை
பார்க்கவும் முடியவில்லையே
பாலகனின் விம்மல் ஏக்கம்
பார்ப்போர் நெஞ்சை நெகிழ வைக்கிறதே!
மகனே அன்னையின் விழிகள்
திறக்கும் உன் ஏக்கம் பறக்கும்
ஆண்டவரை வேண்டி நிற்போம்.

**அபி குலமாலிகா (சித்தன்கேணி)**

### தாய் சேய் அன்பு

தாய் சேய் என்ற அன்பெனும் ஊற்று
தன்னிகரில்லா பாச ஊற்று
தாய்ப்பாசம் தன்னை உணர்ந்திட்டபிள்ளை
தன் பிஞ்சுக்கரங்களால்
தாயின் கண்ணீரைத் துடைக்கின்றதே
குழந்தையும் தெய்வமும் குணத்தால்
ஒன்றென்றார் கவிஞர்
குழந்தையுள்ளம் என்றும் கபடமற்றதே
தாய்சேய் அன்பினை என்றுமே
தரணியிலே பிரித்து விடமுடியாதே
ஈடு இணையில்லாத இணைபிரியாத அன்பு
தாய் சேய் அன்பென்பதை உணர்த்திடுவாய்.

**ஆ.செல்வி (திருநெல்வேலி)**

## மௌனத்தின் தேடல் 743



அன்பு வாசகர்களே! உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி - சங்குநாதம், இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### தாய்ப் பாசம்

அன்னையவள் கண்ணில் கண்ணீர் வழிந்ததைக்
கண்ட பாலனவன் தன் தளிர்க்கரங்களால்
பரிவுடன் துடைத்து உன் பாசமுள்ள பிள்ளை
நானிருக்கேன் உனைக் காலமெல்லாம்
என் கண்ணின் மணிபோல வைத்துக் காப்பேன்
எதற்கும் கலங்காதே தாயே என தன்
தாய்ப் பாசமதை நேசமுடன் காட்டும் பாசமுள்ள
சின்னஞ்சிறு பாலகனிவனன்றோ.

**சி.மகாலட்சுமி (கொக்குவில்)**

### பாசம்...

அம்மா அன்பின் அடையாளம்
உலக உருவாக்கத்தின் மூலம்
தன்னை உருக்கி தரணி செழிக்க
என்றும் பாடுபடுபவள்
அவளை கண்கலங்க வைத்தால்
இந்த உலக உருண்டை
தாங்காது.....

**ச.கனுசிகா (கொக்குவில்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: படகோட்டி
பாடியோர்: டி.எம். சௌந்தரராஜன்
இசை: மஹாதேவன்
இயற்றியவர்: வாலி



கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காகக் கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான் இல்லை ஊருக்காகக் கொடுத்தான்
கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காகக் கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான் இல்லை ஊருக்காகக் கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான் இல்லை ஊருக்காகக் கொடுத்தான்

மண் குடிசை வாசலென்றால் தென்றல் வர வெறுத்திடுமா?
மண் குடிசை வாசலென்றால் தென்றல் வர வெறுத்திடுமா?
மாலை நிலா ஏழையென்றால் வெளிச்சம் தர மறுத்திடுமா?
உனக்காக ஒன்று எனக்காக ஒன்று ஒரு போதும் தெய்வம்
-கொடுத்ததில்லை


கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காகக் கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான் இல்லை ஊருக்காகக் கொடுத்தான்

படைத்தவன் மேல் பழியுமில்லை பசித்தவன் மேல் பாவம் இல்லை
கிடைத்தவர்கள் பிரித்துக்கொண்டார் உழைத்தவர்கள் தெருவில்
-நின்றார்
பலர் வாட வாட சிலர் வாழ வாழ ஒரு போதும் தெய்வம்
-கொடுத்ததில்லை

கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காகக் கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான் இல்லை ஊருக்காகக் கொடுத்தான்

இல்லையென்போர் இருக்கையிலே இருப்பவர்கள் இல்லையென்பார்
இல்லையெனபோர் இருக்கையிலே இருப்பவர்கள் இல்லையென்பார்
மடி நிறைய பொருளிருக்கும் மனம் நிறைய இருளிருக்கும்
எது வந்த போதும் பொதுவென்று வைத்து வாழ்கின்ற பேரை
வாழ்த்திடுவோம்

# சினிமா... சினிமா...



கீர்த்தி சுரேஷ் முதன் முறையாக பாலிவூட்டில் நடித்திருக்கும் "பேபி ஜான்" அவரது திருமணப் பரிசு போல இம்மாதக் கடைசியில் வெளியாகிறது. தமிழில் ரி வால்வர் ரீட்டா என்ற ஹீரோயின் சென்ட்ரிக் படத்திலும் நடித்து முடித்திருக்கிறார். இந்தப் படத்தை நவீன சரஸ்வதி சபதம் படத்தை இயக்கிய கே.சந்துரு இயக்கியுள்ளார். இதைத் தவிர "கண்ணிவெடி" என்ற ஹீரோயின் சென்ட்ரிக்கையும் கைவசம் வைத்துள்ளார் கீர்த்தி.

நடிகர் பார்த்திபன் இப்போதைக்கு இயக்குவதைக் கொஞ்சம் நிறுத்திவிட்டு நடிப்பதில் தீவிரமாக இறங்கி விட்டார். தமிழில் நடிப்பதோடு இப்போது தெலுங்கு, மலையாளப் படங்களில் தலா இரண்டு படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். கேரக்டர் ரோல்களைத் தேர்ந்தெடுத்து அவர் செய்துவருகிறார். இப்பொழுது அவர் முழுமையாக நடிக்கப் புறப்பட்டதில் ஏகப்பட்ட அழைப்புகள் வருகின்றன.





சமீபத்தில் விழா ஒன்றில் யோகி பாபுவும், நடிகர் தாமுவும் சந்தித்துக்கொண்டனர். தாமுவிடம், "நீங்க இப்போது என்னென்ன படங்களில் நடிக்கிறீர்கள், நம் காம்பினேஷனிலும் ஒரு படம் நடிக்கிறீங்களா?" என யோகிபாபு கேட்டதும் தாமு சிரித்துக்கொண்டே "மாணவர்களுக்கு மோட்டிவேஷன் பேச்சு கொடுத்து வருகிறேன்.

50 லட்சம் மாணவர்களைச் சந்திப்பதுதான் என் இலக்கு. இதுவரை 31 லட்சம் பேரைச் சந்தித்திருக்கிறேன். லட்சியம் நிறைவேறிய பிறகு சினிமாவுக்கு வருவேன் பாபு சார்" என்றாராம். வியக்கிறார் யோகிபாபு.




முதல் தடவையாக இரண்டு டீன் ஏஜ் மகன்களுக்கு அப்பாவாக நடித்துவருகிறார் டைரக்டர் சசிகுமார். அதோடு சிம்ரனின் கணவராகவும் முதல் தடவையாக நடிக்கிறார். டூரிஸ்ட் பேமிலி என்று பெயரிடப்பட்ட அந்தப் படத்தின் டீசரும் வரவேற்பை அள்ளியது. இதனால் அடுத்து ஒரு படம் டைரக்ட் செய்யலாம் என்ற முடிவை சற்றுத் தள்ளிப்போட்டிருக்கிறார் சசிகுமார்.



கவுண்டமணி வெகு நாட்களுக்குப் பிறகு "ஒத்த ஓட்டு முத்தையா" என்ற பெயரில் முழு நீள கதாநாயகனாக நடித்தார். படமும் நன்றாகக் காமெடியில் வந்திருப்பதாகத் தகவல். ஆறு மாதத்திற்கு முன்பே ரிலீஸாக வேண்டிய படம். ஏனோ தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது.

மறுபடியும் தீவிர முயற்சி நடக்கிறது. சந்தோஷத்தில் இருக்கிறார் கவுண்டமணி. இதைப் போல செந்திலும் கதை நாயகனாக ஒரு படத்தில் நடித்து முடித்திருக்கிறார். அதுவும் ரிலீஸுக்குத் தயாராகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

430

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை...


சிறுநீரகம் முற்றாக செயலிழந்தவர்களுக்கு இன்னொருவருடைய சிறுநீரகத்தை அறுவைசிகிச்சை மூலம் பொருத்துவதே சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை ஆகும். இரண்டு வகையான சிறுநீரக அறுவை சிகிச்சைகள் உள்ளன. முதலாவது, உயிருடன் உள்ளவர்களிடமிருந்து, அவர்களின் சம்மதத்துடன் சிறுநீரகத்தைப் பெற்று, சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்கு பொருத்துவது.

இரண்டாவது, மூளை முற்றாக செயலிழந்த ஒருவரின் சிறுநீரகத்தை, அவரது குடும்பத்தினரின் சம்மதத்துடன் பெற்று சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்கு பொருத்துவது. எப்படியானவர்கள் இந்த சிறுநீரக தானம் பெறுவார்கள் என்று பார்த்தால், பொதுவாக சிறுநீரக பாதிப்பினால் இரத்தம் சுத்திகரிக்கப்படுபவர்கள் தான் சிறுநீரகத்தை தானமாக பெறுவார்கள்.

அதைவிட, சிறுநீரக தொழிற்பாடு 5% இலும் குறைவாக உள்ளவர்களுக்கும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும். இது Preemptive kidney transplant என அழைக்கப்படும். அதாவது, Hemo dialysis எனப்படும் இரத்த சுத்திகரிப்பிற்கு உட்படுத்தப்பட முன்னரே, சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சையினை செய்வார்கள்.

எப்படியானவர்கள் சிறுநீரக தானம் செய்யலாம் என்று பார்த்தால், இலங்கையின் சட்ட விதி முறைகளின் படி, சிறுநீரகதானம் செய்பவர், சிறுநீரக நோயாளியின் குடும்ப உறுப்பினராக இருப்பது தான் சிறந்தது. அல்லது நோயாளியின் நெருங்கிய நண்பராக இருக்கலாம்.

சிறுநீரகத்தை பணம் கொடுத்து பெறுவதென்பது இலங்கையில் சட்டவிரோதமானதாகும். சிறுநீரக தானம் செய்பவரின் வயது, ஆகக் குறைந்தது 30 ஆக இருக்க வேண்டும். ஆகக் கூடியது 55 தொடக்கம் 60 வயதாக இருக்கலாம். முக்கியமாக அவர் உடல் ஆரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும். அவருக்கு எந்தவிதமான சிறுநீரக பிரச்சினைகளோ அல்லது சிறுநீரகத்தைப் பாதிக்கக் கூடிய நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்களோ இருக்கக்கூடாது. ஒருவர் சிறுநீரக தானம் செய்ய முன்வரும் போது, அவருக்கு சிறுநீரக பிரச்சினைகள் மற்றும் மேற்குறிப்பிட்ட நோய்கள் இருக்கிறதா என அறிய பல பரிசோதனைகளைச் செய்து, அவர் சிறுநீரக தானம் செய்ய உடல் ரீதியாக தகுதியானவர் என உறுதியாக அறிந்த பிறகு தான் அவரிடமிருந்து சிறுநீரகத்தை பெறக்கூடியதாக இருக்கும்.




சிறுநீரக தானம் செய்வதால், அந்த குறிப்பிட்ட நபருக்கு ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுமா என்று பார்த்தால், நிச்சயமாக எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. மிக மிக அரிதாக அவருக்கு குருதி அமுக்கம் ஏற்படலாம். சிறுநீரக தானம் செய்தவர் ஒவ்வொரு வருடமும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார். இதன்மூலம் அவருக்கு ஏதேனும் நோய்கள் ஏற்பட வாய்ப்பிருக்கும் பட்சத்தில் அதனை உடனடியாக கண்டறிந்து சிகிச்சைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எல்லோரும் சிறுநீரகத்தை தானமாக கொடுத்து விட முடியாது. அதற்கு முதலில் அவரது குருதி பொருந்த வேண்டும். உதாரணமாக, சர்வ வழங்கி என கூறப்படும் O வகை இரத்தம் உடையவர்கள், யாருக்கும் சிறுநீரகத்தை தானமாக கொடுக்கலாம். அதேபோல சர்வ வாங்கி என்று கூறப்படும் AB வகை குருதி உடையவர்களுக்கு யாரும் சிறுநீரகத்தை தானமாக கொடுக்கலாம். ஆனால், B வகை குருதி உடையவர்கள், B அல்லது O வகை குருதி உடையவர்களிடமிருந்து மட்டுமே சிறுநீரகத்தை தானமாக பெற முடியும்.

அதேபோல் A வகை குருதி உடையவர்கள், A அல்லது O வகை குருதி உடையவர்களிடமிருந்து மட்டுமே சிறுநீரகத்தை தானமாக பெற முடியும். அதன்பின், நோயாளி மற்றும் சிறுநீரக தானம் செய்பவரின் இரத்தத்தில் Gene பொருந்துகிறதா என்று பரிசோதித்து பார்த்த பின்னர் மட்டுமே ஒருவர் சிறுநீரகத்தை நோயாளிக்கு தானமாக கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

இதில் முக்கியமானதொரு விடயம் என்னவென்றால், உயிருடன் இருப்பவர்களிடமிருந்து சிறுநீரகத்தை தானமாக பெறுவதற்குரிய மருத்துவ செலவு மிகவும் அதிகமாகும். இதற்கு மாற்று வழியாக, மூளைச் சாவடைந்த ஒருவரின் சிறுநீரகத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம்.

இதில் பொதுவாக எதிர்நோக்கும் பிரச்சினை என்ன வென்றால், மூளைச் சாவடைந்த ஒருவரின் சிறுநீரகத்தை தானமாக் பெற அவரது குடும்பத்தினரிடமிருந்து அனுமதியைப் பெறுவது எமது சமூகத்தில் மிகவும் கடினமான காரியமாகும். அண்மையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், மூளைச் சாவடைந்த ஒருவரிடமிருந்து, அவரது குடும்பத்தினரின் அனுமதியுடன் சிறுநீரகங்களைப் பெற்று, ஒரு பன்னிரண்டு வயது சிறுவனுக்கு பொருத்தி, முதன் முதலாக சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

மூளைச்சாவடைந்ததை உறுதிப்படுத்த, அனுபவம் மிக்க வைத்திய நிபுணர்கள் அந்த நபரை 24 மணி நேர இடைவெளியில் இரு தடவைகள் பரிசோதித்துப் பார்ப்பார்கள். அதில் ஒருவர் நரம்பு சம்பந்தமான வைத்திய நிபுணராக இருப்பார்.

இவர்கள் உறுதிப்படுத்தினால், அந்த நபர் 100% உயிர்பிழைப்பதற்கான வாய்ப்பில்லை. இந்நிலையில் அவரது குடும்பத்தினருக்கு அதனை தெரியப்படுத்துவதும், சிறுநீரகத்தை தானமாக கேட்பதும் உண்மையில் ஒரு கடினமான விடயமாகும். மூளைச் சாவடைந்ததை வைத்தியர்கள் உறுதிப்படுத்திய பின்னர், குடும்பத்தினரே முன்வந்து சிறுநீரகங்களை தானமாக கொடுப்பதன் மூலம் பல உயிர்களை காப்பாற்றக் கூடியதாக இருக்கும்.

கிட்டத்தட்ட 4 தொடக்கம் 20 வயதிற்கிடையில், 15-20 நோயாளிகள் இரத்தம் சுத்திகரித்தலிற்கு உட்படுத்தப்பட்டு வைத்தியசாலையில் இருக்கிறார்கள். உயிருள்ள ஒருவரிடமிருந்து சிறுநீரகத்தைப் பெறுவதற்கு அவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இவ்வாறானவர்களுக்கு சிறுநீரக தானம் கொடுத்து, அவர்களது உயிரைக் காப்பாற்றுவது சிறந்த செயலாகும்.

Dr. வே.பவந்தன்,
சிறுநீரக வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# பொது அறிவித்தல்-2025

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் தொழில் முயற்சியை மேற்கொள்வோர், தொழில் நிறுவனங்கள் ஏனைய அமைப்புக்கள் அனைத்தும் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கீழ்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பில் எமது பிரதேச சபையின் **தலைமை அலுவலகம்** மற்றும் **அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய்** ஆகிய உப அலுவலகங்களிலும் அலுவலக நாட்களில் மேலதிக விபரங்களையும் சேவையையும் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:- 1. பிரதேச சபையினால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பில் பிரதேச சபையினால் 2024.12.27ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கமைவாகக் கட்டணங்கள் அறவிடப்படும்.**

**2. இந்நடைமுறைகளை பின்பற்றத் தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கிணங்க சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்**

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | குறித்த நிதியாண்டிற்கான அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | **ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல்** | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதன உரிமையாளர்கள் | காணி உரிமையினை மாற்றிப் பெற்றுக் கொண்டவர்கள் உடனடியாகவே பிரதேச சபையின் உரிய அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய உபஅலுவலகங்களில் விண்ணப்பப் படிவத்தினை பெற்று தேவையான உறுதிகளின் பிரதியுடன், நில அளவைப்படம், தோம்பு, மற்றும் தேவையான ஆவணங்களுடன் சட்டத்தரணி ஒருவரினால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினையும் வழங்குவதன் மூலம் ஆதனப் பெயர் பதிவேட்டில் பெயர் மாற்றத்தினை செய்து கொள்ள முடியும். |
| 02 | **ஆதன வரி செலுத்துதல்** | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | எமது சபையின் கீழ் அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்களில் ஆதனவரி அறவீடு நடைமுறையிலுள்ளது. எனவே குறித்த நான்கு உப அலுவலக எல்லைக்குள் வசிப்பவர்கள் ஆதன வரியினை செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் இக் காலங்களில் குறிப்பிட்ட விகிதத்தின் தொகையினை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தும்படி இத்தால் தங்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. பிரிவு 134(7) இற்கமைய இவ் ஆதன வரியானது அதே நிதியாண்டின் ஜனவரி மாதம் 31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஆண்டு வரியை முழுமையாகச் செலுத்தப்பட்டால், அத்தகைய வரித்தொகையின் 10% கழிவு சலுகை வழங்கப்படும். மேலும் 01 ஆம் 02 ஆம் 03ஆம் 04ஆம் கந்தாயங்களுக்குரிய ஆதன வரித்தொகையினை அந்தக் காலப்பகுதியின் முதலாவது மாதத்திற்குள் செலுத்தப்பட்டால், குறிப்பிட்ட கந்தாயத்திற்கும் மிகுதியாகவுள்ள கந்தாயங்களுக்கும் ஆதனவரியின் தவணைப் பணத்தொகையின் 5% கழிவீடானது வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் ஆதனவரியானது செலுத்தப்படாதவிடத்து, அக்காலாண்டுக்குரிய ஆதனவரியின் 20% தண்டமாக ஆதனவரியுடன் சேர்த்து அறவிடப்படும். இவ்வாறு செலுத்தத் தவறினால், செலவுகளை அறவிடுவதற்கு இப் பிரதேச சபையினால் ஒரு எழுத்தாணை வழங்கப்படும். பிரிவு 161 அ (II) இன் பிரகாரம் வெறுங்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% இலும் பிரிவு 161ஆ(III) இன் பிரகாரம் வெற்று நிலங்களும், வதிவிட வளவுகளும் தவிர்ந்த ஏனைய ஆதனங்களின் மீது 20% இலும் எழுத்தாணைக்குரிய செலவும் விதிக்கப்படும் |
| 03 | **வியாபார உரிமம்/ வியாபார வரி** | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள் | இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2025ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம்/ வியாபார வரி என்பவற்றை உபஅலுவலகங்களில் 2025.03.31ஆந் திகதிக்குப் பிந்தாமல் உரிய கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 2025.03.31 ஆந் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களை செலுத்தத்தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04 | **மரக்கறி,மீன், இறைச்சிவிற்பனை தடை செய்தல்.** | பிரதேச சபையின் எல்லைக்குள் மீன், இறைச்சி, மரக்கறி வியாபாரம் செய்வோர். | சபையின் பொதுச் சந்தைகள், மீன்சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் (½Km) சுற்றுவட்டத்தினுள் மரக்கறி, மீன்வகைகள், கோழி இறைச்சி, பழவகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறிச்செயற்பட்டால் சட்டத்தை மீறியதாக கருதி நடவடிக்கை எடுக்கப்படும் |
| 05 | **சூழல் பாதுகாப்பு உரிமம்** | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள் | 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் 2264/18ஆம் இலக்க 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்பட்ட இலங்கை சனநாயகக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகைக்கு அமைவாக அ,ஆ,இ இல் உள்ளடக்கப்பட்டுள்ள வியாபார/கைத்தொழில் நிலையங்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையில் பாகம்(ஈ) இல் உள்ளடக்கப்பட்டுள்ள 39 விடயங்களிற்கும் சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கக் கூடியதாகவுள்ளது. இவற்றுள் தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள், அரைக்கும் ஆலைகள், உணவு உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள், வெதுப்பகங்கள், கோழிப்பண்ணைகள், கொங்கிறீட் முன்வார்ப்பு கைத்தொழில்கள், மரக்கட்டை அடிப்படையிலான கைத்தொழில்கள், தச்சுவேலைத் தளங்கள், வாகன பராமரிப்பு இடங்கள் தவிர்ந்த கொள்கலன் சாலைகள் போன்ற விடயங்களிற்கு தற்போது சபையினால் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்றது. |
| 06 | **1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்/ பிறசட்டத்தின் கீழ் கட்டடங்களை அமைப்பதற்கான அனுமதி வழங்கல்** | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள். | 1. பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், எல்லைச் சுவர்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய்க் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகளை மேற்கொள்ளல் வேண்டும். தவறின் 1978ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.<br>2. கட்டட நிர்மாண அனுமதி பெற்றவர்கள் அனுமதி கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 01 வருட காலப்பகுதியினுள் கட்டட நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினை செலுத்தி குடிபுகுச் சான்றிதழ் அல்லது அமைவுச் சான்றிதழினை பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும். 01 வருட காலப் பகுதியினுள் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதவிடத்து உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியை இரண்டு தடவைகள் மட்டும் மீளவும் புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும் |
| 07 | **காணி உபபிரி விடுகை** | ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று துண்டுகளாகப் பிரிக்கப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் |
| 08 | **காணி ஒருங்கிணைத்தல்** | ஆதன உரிமையாளர்கள் | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆதனங்கள் இணைக்கப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் |
| 09 | **படவரைஞராக பதிவு செய்தல்/ புதுப்பித்தல்** | படவரைஞர்கள் | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 47 தொடக்கம் 59 வரையானதுடன் மற்றும் 1978 ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணை/ ஒழுங்கு விதி நடைமுறைக் கமைவாக 2024.11.14 ஆந் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கமைய வலி. கிழக்கு பிரதேச சபையில் 2024ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆந் திகதிக்கு முன்னர் எமது சபை எல்லைக்குள் படவரைஞராக சேவைகளை வழங்க விரும்பியவர்கள் எமது தலைமை அலுவலகத்தில் பதிவினை மேற்கொண்டிருத்தல் அல்லது புதுப்பித்து இருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாதோரினால் அல்லது புதுப்பிக்காதோரினால் வரையப்படும் படங்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கல்வித் தகைமை Drafting Technology Civil Level – 5 இருத்தல் வேண்டும். |
| 10 | **துவிச்சக்கர வண்டி உரிமம் மற்றும் மிருகவரி உரிமம்** | துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மற்றும் வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | 2025 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி உரிமம் மற்றும் மிருகவரி உரிமம் (நாய்களுக்கானது) என்பன 31.03.2025 ஆம் திகதிக்கு முன்னர் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறின் உரிய தரப்பினர் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் |
| 11 | **விளம்பரங்களை அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல்** | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 126(vii) (xxx) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு உருவாக்கப்பட்ட 1952/16ஆம் இலக்க 2016ஆம் ஆண்டு மாசி மாதம் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட நியமத்துணை விதியின் பிரகாரம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் விளம்பரங்களை நிறுவும் அல்லது காட்சிப்படுத்தும் விளம்பர நிறுவனங்கள் அல்லது வேறு நபர்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு செய்தல், கட்டுப்படுத்தல் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும்.<br>அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் சகல விளம்பரங்கள் ஆகியவற்றிற்கான கட்டணத்தை 2025.03.31 ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ் விடயம் உரிய விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வர்த்தக நிறுவன உரிமையாளர்களது பொறுப்பாகும். அத்துடன் உரிய அனுமதி பெறப்படாது காணப்படுகின்ற சகல விளம்பரங்களும் வேறு எந்த அறிவித்தலுமின்றி உரிய இடத்திலிருந்து 2025.03.31ஆந் திகதிக்குப் பின்னர் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை சபையினால் மேற்கொள்ளப்படும். இவ் விடயம் தொடர்பில் மேன்முறையீடுகள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. |
| 12. | **திண்மக் கழிவுகள் தொடர்பாக குடியிருப்பாளர்கள், வியாபார நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டியவை.** | பிரதேச சபை எல்லைக்குள் வதியும் குடியிருப்பாளர்கள், வியாபார நிலைய உரிமையாளர்கள், அரச, தனியார் நிறுவனங்கள். | 1. ஆதன உரிமையாளர்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டணைக்குரிய குற்றமாகும். கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லுதல் ஆகியவை பொதுச் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது.<br>2. தங்கள் வீடுகளில் சேரும் மேலதிக திண்மக்கழிவுகளை உரிய முறையில் தரம் பிரித்து ஒலிபெருக்கியவாறு தங்கள் வீதிகளிற்கு வருகைதரும் பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனத்தில் அதற்கான கட்டணத்தினை அவ்விடத்தில் செலுத்தி கழிவுகளை அகற்றி கொள்ள முடியும். அதற்கான உபபற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.<br>3. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், ஏனைய தொழில்முறை நிறுவனங்கள், முடிதிருத்தும் நிலையங்கள் என்பன தங்கள் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை உரிய கழிவகற்றல் கட்டணங்களை மாதாந்த அடிப்படையில் அல்லது தடவைகளிற்கான அடிப்படையில் உபஅலுவலகங்களில் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை காண்பித்து கிரமமான முறையில் கழிவகற்றல் சேவையினை பெற்றுக்கொள்ள முடியும். சபையினது குறித்த கழிவகற்றல் முறைக்கு ஒத்துழைக்காது கழிவகற்றலினை மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>4. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுப் பொருட்களை போடுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறிச்செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>5. பொது இடங்களில், வீதிகளில் கழிவுகளை கொட்டுவோரை கண்காணிப்பதற்காக எமது சபை ஊழியர்கள் இரவு பகலாக கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். அவர்களினால் அவ்வாறு இனம் காணப்படுவோர் மீது உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 13. | **முச்சக்கர வண்டி தரிப்பிடம்** | பிரதேச சபை எல்லைக்குள் முச்சக்கர வண்டி தரிப்பிடங்களிலிருந்து முச்சக்கர வண்டி சேவை வழங்குவோர். | 1987 ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1),126 மற்றும் மாகாண சபையினால் 2016.02.02ஆம் திகதி வெளியிடப்பட்ட 1952/16ஆம் இலக்க இலங்கை சனநாயக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நியமத் துணைவிதிகளின் அத்தியாயம் 04 பிரிவு 11 இன் பிரகாரம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் காணப்படும் முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு செய்தல், கட்டுப்படுத்தல் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் அவ்வாறு சபையின் கீழ் உள்ள தரிப்பிடங்களில் மட்டுமே முச்சக்கர வண்டியை நிறுத்தி சேவையிலீடுபட முடியும் என்பதோடு குறித்த தரிப்பிடத்திற்கு வருடாந்த கட்டணமாக ரூபா1000/= இனை அப் பிரதேசத்திற்குரிய எமது உப அலுவலகங்களில் செலுத்தி பற்றுச்சீட்டினை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து தரிப்பிடங்களிலிருந்து சேவையில் ஈடுபட முடியாது என்பதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 14 | **வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக** | வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குவோர் | சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்திற்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பிரதேச சபையில் முறைப்படி அனுமதியினைப் பெற்ற பின்பே தமது சேவையினை ஆரம்பித்தல் வேண்டும். |
| 15 | **நீர் வழங்கல் சேவை, உழவு இயந்திர சேவை.** | நீர், உழவு இயந்திர சேவை தேவைப்படுவோர் | 1. நீர்வழங்கல் சேவை<br>பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைக்கு பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரையும், வாடகைக்கு தண்ணீர் தாங்கியினையும் பெற்றுக்கொள்ள முடியும்.<br>2. உழவு இயந்திர சேவை<br>உழவு இயந்திர சேவையைப் பெறுவதற்கு தலைமைக் காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை செலுத்தி சேவைகளை பெற்றுக்கொள்ளலாம். |

(சி-1905)

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திக்காக கிடைக்கும் நிதியை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும்

## வடக்கு ஆளுநர் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

2025 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் ஒக்டோபர் மாதத்துக்குள் முடிவுறுத்தப்படவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தேசிய நிதி ஆணைக் குழுவால் வாக்குப் பணக் கணக்கு 2025ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான 4 மாதங்களுக்குமான நடைமுறை, மூலதன செலவின ஒதுக்கீட்டு விபரம் வடக்கு மாகாணத்துக்குரியது அறிவிக்கப்பட்டுள்ளது.

அதை உத்தியோகபூர்வமாக வெளியிடும் நிகழ்வு வடக்கு மாகாண பேரவைச் செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கிடைக்கும் நிதியை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்திய வட மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், நிதி ஆணைக் குழுவின் தெளிவான வழிகாட்டல்களுக்கு அமைவாக திட்டங்களைத் தயாரிக்குமாறு கோரினார். (நி-8-33)


Dual Diploma With UK Qualification

English + IT



IT Courses
Diploma in IT
Graphic Designing
Web Designing
Computerized Accounting

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

Nelliyady. Tel : 021-7284200
Kilinochchi. Tel : 021-4927114
Vavuniya. Tel : 024 -4930041
Vavuniya 2nd Tel : 024-4930042
Puthukkudiyiruppu. Tel : 021-2290933
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Kalmunai. Tel : 067-4300207
Mullaithivu.. Tel : 021-7284344
Mannar. Tel : 021-4332294

IDP IELTS, Ukvi Exam centre (681)


(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

| | | | |
|---|---|---|---|
| 16 | பொது சுகாதாரம் பேணல். | ஆதன உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள், வர்த்தகர்கள் | 1.சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் காணப்படும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாகவுள்ள காணி உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்பரவு செய்து பொதுசுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்பதுடன், டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள், பொருட்களை காணியில் இல்லாதொழிக்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>2. உணவு குடிபானம் போன்றவை கையாளும் இடங்கள் அல்லது உற்பத்தி மற்றும் விற்பனை செய்யுமிடங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு திருப்திகர அறிக்கையின் அடிப்படையிலேயே கடமையாற்ற அனுமதிக்கப்படல் வேண்டும்.<br>3. 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலீத்தின் பாவனையானது 2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரம் தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 17 | கட்டாக்காலி விலங்குகள் தொடர்பானது. | கால்நடைகள் / நாய்கள் வளர்ப்போர் | சபை எல்லைக்குள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக விலங்குகள் நடமாடுவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. சபை எல்லைக்குள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக திரியும் விலங்குகள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பிரதேச சபையால் பிடிக்கப்படும். பின்னர் அவை உரிய காலத்தினுள் உரிமை கோரும் பட்சத்தில் பிடிகூலி தண்டம் மற்றும் பராமரிப்புச்செலவுடன் மீள வழங்கப்படுவதுடன் உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் |
| 18 | வீதி ஒழுங்கு முறைகளை பேணல் | ஆதன உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள், வர்த்தகர்கள் | சபை எல்லைக்குள் வீதியோரங்களில் பாதைக்கு இடையூறாக மரங்கள் மற்றும் பூக்கன்றுகள் நாட்டுதல்/ வளர்க்கப்படுதல், கொங்கீறீற்றிலான கட்டுமானம் கட்டுதல், இருக்கைகள் அமைத்தல், இளைப்பாறல் மடங்கள் கட்டுதல், நடைபாதை வியாபாரம் செய்தல் என்பன பொதுமக்களிற்கு இடையூறாகவும், பொது ஒழுங்கு சீர்குலைவுக்கும் காரணமாக காணப்பட்டால் அவை தடைசெய்யப்படும் என்பதுடன் வளவிலிருந்து வீதியைநோக்கி வெளியே வளர்ந்திருக்கின்ற தாவர மற்றும் மரக்கிளைகளை உடனடியாக அகற்றுதல் வேண்டும். சபை எல்லைக்குள் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தரப்படுகின்றது. மேலும் போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் கல், மண், சல்லி போன்ற கட்டடப்பொருட்கள் சேமித்துக்கொள்வதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. |
| 19 | பொது மயானங்களின் பயன்பாடு | மயானங்களை பயன்படுத்துவோர் | 1. எமது சபையின் எல்லைக்குட்பட்ட எந்தவொரு பொது மயானங்களில் சபையின் அனுமதியின்றி உடலங்களை எரித்தல்/ புதைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.<br>2. எந்தவொரு மயானங்களில் உடலங்களை எரித்தல் / புதைத்தல் செயற்பாடுகள் பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ளப்படல் வேண்டும்.<br>3. கட்டணத்தை செலுத்துவதற்கு அலுவலக வேலை நாட்களில் மு.ப.8.30 மணி தொடக்கம் பி.ப.3.00மணி வரை உரிய உபஅலுவலகத்திலும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் புத்தூரில் அமைந்துள்ள பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் செலுத்தி அனுமதியை பெற்றுக்கொள்ள முடியும்.<br>4. அனுமதிக்காக மேற்குறிப்பிட்ட இடங்களில் விண்ணப்பத்தை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பதுடன் இறப்பு தொடர்பான உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 20. | கழிவு நீர் | ஆதன உரிமையாளர்கள் / வர்த்தகர்கள் | பகிரங்க வெள்ள வடிகால்களில் வீட்டுக் கழிவு நீர், வியாபார நிறுவனங்களின் கழிவு நீர் சேர்க்கப்படல் சட்ட விரோதமானதாகும். அவ்வாறு செயற்படுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் ஏற்புடைய நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் சகல பொதுமக்களும் மிகவும் கவனமெடுத்து செயற்படுமாறும், குறித்த அறிவித்தல்களை பின்பற்ற தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**திரு.இ.பகீரதன்**
**செயலாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர்.**
2024.12.28 (C-1905)

# யாழ்.பல்கலையில் மார்கழி இசைவிழா 3 ஆம் நாள் அரங்க நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் மற்றும் யாழ். வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசை விழா 2024- 3 ஆம் நாள் அரங்க நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பி.ப 5 மணிக்கு மங்கல விளக்கேற்றல், திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நெறியாள்கையில் இந்தியன் கோர்னர், இசைப்பிரிவு மாணவர்கள் நிகழ்த்தும் தமிழ்த்தாய் வாழ்த்தும், இந்தியத் துணைத்தூதரகத்தின் இந்தியத் துணைத் தூதுவர் சாயிமுரளி திருநிறை வழங்கலும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து பி.ப 5.30 தொடக்கம் இரவு 9.30 மணிவரை திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நெறியாள்கையில் இந்தியத் துணைத் தூதரக இசைத் துறை மாணவர்கள் வழங்கும் "மதுர கானங்கள்", யாழ். மண்ணின் புகழ் பூத்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசைச் சங்கமம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள் வழங்கும் "தமிழ் இசை அரங்கு" நர்த்தன ஷேத்ரா நடனப்பள்ளி மாணவர்கள் வழங்கும் "சூடிக் கொடுத்த சுடர்க் கொடி" இந்தியப் புல்லாங்குழல் வித்துவான் ஸ்ரீதர் தலைமையிலான "புல்லாங்குழல் இசை" யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத் துறை மாணவர்கள் வழங்கும் நாட்டிய நாடகம் "அகலிகை சாப விமோசனம்" போன்ற அரங்க நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (6-8)

# திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர் கைது

## சங்கிலி, மோதிரம், காப்பு மற்றும் பணம் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரசடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 23 ஆம் திகதி திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மூதாட்டி ஒருவர் தனித்திருந்த வீட்டிற்குள் பகல் வேளையில் நுழைந்த திருடன் வீட்டில் இருந்த எட்டு பவுண் நகை, 200 கனேடியன் டொலர் மற்றும் 35 ஆயிரம் ரூபாய் இலங்கைப் பணம் ஆகியவற்றை கொள்ளையிட்டுக் கொண்டு தப்பித்திருந்தார்.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடிப்படையாக கொண்டு விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சாவகச்சேரி மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 39 வயதான திருட்டுச் சந்தேக நபரை கைது செய்ததுடன் திருடப்பட்ட நகை, பணம் ஆகியவற்றையும் மீட்டுள்ளனர்.

இதன்போது பொலிஸாரால் 2 சங்கிலி, 2 மோதிரம், 2 காப்பு மற்றும் பணம் ஆகியன மீட்கப்பட்டுள்ளன. திருட்டுச் சந்தேக நபருடன் திருட்டு நகையை விற்பனை செய்ய உதவியவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி திருட்டுச் சந்தேக நபர் பல திருட்டு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் வழிகாட்டலில் பொலிஸ் உப பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரின் முயற்சிகளுக்கு இடையூறு அளிக்காமல் இருப்பதில் கவனமாய் இருப்பவரே இனிய தன்மை உடையவர். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் பாடசாலையின் விவசாயக் கழகம் போல...

ஒன்பதாம் தரத்தில் கற்றுக் கொண்டிருக்கின்றோம். விவசாயப் பாடத்தை ஜோர்ஜ் துரையையா என்ற மிகச்சிறந்த ஆசிரியர் கற்பித்துக் கொண்டிருந்தார்.

பாடசாலையில் விவசாயக் கழகம் அமைக்க வேண்டும் என விரும்பிய ஆசிரியர், ஒரு நாள் விவசாயக் கழகத்தை அமைத்தார்.

வழமைபோல தலைவர், செயலாளர், பொருளாளர் என அந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

கஷ்ரகாலம் போல அன்றைய நாள் எமது வகுப்பின் மாணவத் தலைவர் பிரசன்னமாகவில்லை. மறுநாள் அவர் வகுப்புக்கு வந்ததும் விவசாயக் கழகம் அமைக்கப்பட்டமை பற்றி, சகமாணவர்கள் அவருக்கு எடுத்துக் கூறினர்.

அவ்வளவுதான் விவசாயக் கழகம் அமைப்பதாக இருந்தால், அதுபற்றி முன்கூட்டியே தெரியப்படுத்தியிருக்க வேண்டும். ஆகவே இந்த விவசாயக்கழகம் செல்லுபடியற்றது என அந்த மாணவன் வாதம் செய்தான்.

அந்த வாதத்தோடு நிலைமை முடிந்து போகும் என்றே ஏனைய மாணவர்கள் எதிர் பார்த்தனர்.

ஆனால் அதுதான் இல்லை. விவசாய பாடம் ஆரம்பமாகியது. ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார். மாணவர்கள் எழுந்து அமர, அந்த வகுப்பின் மாணவத் தலைவன் மட்டும் நின்று கொண்டிருந்தான்.

இதனை அவதானித்த ஆசிரியர் என்ன சங்கதி என வினவினார். நேற்று நான் பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை சேர். நேற்று விவசாயக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கழகம் அமைக்கப்படுவது பற்றி எனக்குத் தெரியாது. எனவே கழகத்தின் தெரிவை மீண்டும் நடத்த வேண்டும் என்றான்.

ஆசிரியர் இம்மியும் சலனப்படவில்லை. மிகவும் நிதானமாக, இனி அந்தத் தெரிவை நிறுத்த முடியாது எனக் கூறினார்.

ஆசிரியரின் பதில் குறித்த மாணவனைத் திருப்திப்படுத்தவில்லையாயினும், ஆசிரியரின் கட்டளைக்குப் பணிந்து கதிரையில் அமர்ந்து கொண்டான்.

எனினும் சம்பந்தப்பட்ட மாணவனை ஆசிரியர் உற்றுநோக்குகிறார். மாணவனின் முகம் சோர்ந்திருப்பதை அவதானிக்கிறார்.

விவசாயக் கழகத்தில் தனக்கு ஒரு பதவியும் கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் மாணவனின் முகத்தில் தெரிந்தது.

உடனே அந்த ஆசிரியர்; மாணவர்களே, நேற்று விவசாயக் கழகம் அமைத்தோம். அந்தக் கழகத்தில் பூந்தோட்டத்துக்குப் பொறுப்பாக மாணவர் ஒருவரை நியமிக்காமல் விட்டு விட்டோம்.

அந்தப் பூந்தோட்டக்கழகத்தின் தலைவராக இந்த வகுப்பின் மாணவத் தலைவரை நியமிக்கின்றேன் என அறிவித்தார். அவ்வளவுதான் பிரஸ்தாப மாணவன் மகிழ்ந்து கொண்டான்.

இற்றைக்கு 44 வருடங்களுக்கு முன்னர் நடந்த அந்தச் சம்பவம் இப்போது ஞாபகத்துக்கு வந்தபோது எம்மை அறியாமலே சிரிப்பு வந்தது.

சரி, 44 ஆண்டுகளுக்கு முன்னர் வகுப்பறையில் நடந்த அந்தச் சம்பவம் இந்த இடத்தில் எதற்காக என்று நீங்கள் கேட்கலாம்.

ஆம், மாவை சேனாதிராசா அவர்களுக்கு தமிழரசுக் கட்சி, அரசியல் குழுத் தலைவர் என்ற ஒரு பதவியைக் கொடுத்துள்ளது.

அதாவது, எங்கள் பாடசாலையின் விவசாயக் கழகத்தின் பூந்தோட்டத் தலைவர் பதவி போல மாவைக்கும் ஒரு பதவி. தமிழரசுக் கட்சியின் நிலைமை எங்கே போகிறது என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

# தீவக மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்

(புங்குடுதீவு)

தீவக மக்களுக்குப் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை விரைவில் நாம் முன்னெடுக்க இருக்கின்றோம். இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவனுடனும் கலந்துரையாடியிருக்கின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பிரிட்டன் வாழ் புங்குடுதீவைச் சேர்ந்த நலன் விரும்பிகளால் வட இலங்கை சர்வோதய குடிநீர் வழங்கல் திட்டத்துக்கு வெள்ளிரும்பிலான குடிதண்ணீர் பவுசர் கையளிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை புங்குடுதீவு புஸ்பா மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநரால் பவுசர் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் உதவி புரிந்த நலன்விரும்பிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கல்லும் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர் குடி நீரின் தேவையின்று தீவகப் பகுதியில் மாத்திரம் அல்ல யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் உணரப்பட்டுள்ளது.

இன்று அங்கு குடிதண்ணீரின் தரம் மற்றும் அளவு தொடர்பில் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

கடல் நீரை நன்னீராக்கி குடிநீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும்இதர குடிநீர் மூலங்களையும் கண்டறிய வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் எண்ணம், சிந்தனை நல்நோக்குடன் இருந்தமையால் அவர் அன்று ஆரம்பித்த வட இலங்கை சர்வோதய சங்கம் வியாபித்து விருட்சமாக வளர்ந்திருக்கின்றது.

நாம் நல்ல எண்ணத்துடன் எதை ஆரம்பித்தாலும் அதை, இறை சக்தியாவது வெற்றிகரமாக நடத்தி முடிக்கும்.

இந்த ஊர் மக்கள் புலம்பெயர்ந்து சென்றாலும்தமது சொந்த மண்ணை மறக்கவில்லை. அதனால்தான் அவர்கள் இன்றும் உங்களுக்கு உதவியைச் செய்கின்றார்கள்.

இவ்வாறு உதவி செய்ய முன்வந்த அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இவ்வாறான உதவிகளை உரிய முறையில் நீங்கள் பயன்படுத்திப் பலன் பெற வேண்டும் என ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை புங்குடுதீவுப் பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் தேவை எனவும் ஏதாவது ஒரு வங்கி அமைக்கப்பட வேண்டும் எனவும் அந்தப் பிரதேச மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வட இலங்கை சர்வோதய சங்கத்தின் அறங்காவலர் செல்வி பொன். யமுனா தேவி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேள், வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், தீவகம் தெற்கு பிரதேச செயலர் க.சிவகரன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன், வேலணை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அ.ஜெயக்குமாரன் மற்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர். (ந-7)

# தருமை ஆதீனம் திருமலை வருகை

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான திருக்கோணேச்சரம் ஆலயத்துக்கு இந்தியா, தமிழ்நாடு, தருமபுர ஆதீன 27ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (27) விஜயம் செய்தார்.

இதன்போது வழிபாட்டில் ஈடுபட்டு பெருமானை தரிசித்ததுடன் பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார். (ந-7)

# கிளி.ஊடகவியலாளரை தாக்கியோருக்கு மறியல்

கிளிநொச்சி ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வனை தாக்கிக் கடத்துவதற்கு முற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த சந்தேக நபர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை நாளை 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் குறித்த தினத்தில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ந-7)

# பயன்படுத்தப்பட்ட தே.எண்ணெய் மீண்டும் சந்தையில் விற்பனை

## பொ.சு.ப. சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

பயன்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் சந்தையில் விற்கப்படுகின்ற மோசடி தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் மிளகாய்த்துள், மஞ்சள் உள்ளிட்ட கலப்பட மசாலாப் பொருட்கள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் சமீரா முத்துக்குடா தெரிவித்துள்ளார்.

இதேவேளை பண்டிகைக் காலத்தில் சுகாதாரத் தரங்கள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் டிசம்பர் முதலாம் திகதி முதல் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# ரின் மீன்களுக்கு கட்டுப்பாட்டு விலை

## வெளியானது வர்த்தமானி

(கொழும்பு)

ரின் மீன்களுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 425 கிராம் தகரத்தில் அடைக்கப்பட்ட டுனா மீனின் அதிகபட்ச சில்லறை விலை 380 ரூபாயாகவும், 155 கிராம் தகரத்தில் அடைக்கப்பட்ட டுனா மீனின் அதிகபட்ச சில்லறை 180 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 425கிராம் நிறையுடைய தகரத்தில் அடைக்கப்பட்ட மெக்கரல் மீனின் விலை 420 ரூபாய்க்கும், 425 கிராம் நிறையுடைய ஜக் மெக்கரல் மீனின் அதிகபட்ச சில்லறை விலை 560 ரூபாயாகவும் குறிப்பிட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த உத்தரவு இன்று (நேற்று)முதல் அமுலாகும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது. (ந-7)

# சமகால அரசியல் உரை அரங்கு

(ஆவரங்கால்)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் உரையரங்கு இன்று ஞாயிற்றுக் கிழமை (29) மாலை 03 மணி முதல் பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் கூட்டுறவு நகர் மேல்மாடியிலுள்ள கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் “தமிழ் மக்களும் புதிய அரசியல் அமைப்பும்” எனும் தலைப்பிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் “தமிழ்மக்களும் முறைமை மாற்றமும்” எனும் தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிக்கு எதிராக சட்ட நடவடிக்கை

# உயர்நீதிமன்றம் வழங்கிய சரித்திர தீர்ப்பு!

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தில்

அதனைக் கற்றறிந்த நீதிபதி முறையான திருத்தப்பட்ட முறைப்பாட்டை தாக்கல் செய்து நகர்த்த உத்தரவிட்டார்.

பின்னர் நிலத்தின் எல்லைகளை மற்றும் அல்லது விரிவினை 10 ஏக்கர் எனக்குறிப்பிடப்பட்ட திருத்தப்பட்ட மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அது சரியான அடையாளம் அல்லது விளக்கம் இல்லாமல் மனு தாக்கல் செய்யப்பட்டது. பிரதிவாதி என்றாலும் தனது சேவைகளைப் பெறுவதற்காக 50,000/- பெற்றதாக ஒப்புக் கொண்டார். ஆரம்ப வழக்கோ அல்லது திருத்தப்பட்ட வாதமோ என ஒரு திட்டத்தைக் அங்கு குறிப்பிடவில்லை.

14. ஒவ்வொரு வழக்கறிஞரும் ஒரு வழக்கை எவ்வாறு வாதிடுவது என்பது குறித்து அவர்களுக்கே உரிய அணுகுமுறைகள் இருக்கலாம் எனும்போது அடிப்படைகள் மாறாமல் பொதுவானவை அமையும்.

அடிப்படைகளைக் கண்காணிக்கும் போது ஒரு வழக்கின் விடயதானம் இனங்காண்பது பதிலளிப்பவர் கூறியது போல கவனிப்பு மற்றும் தேர்ச்சியின் தரத்திற்கு ஒரு வழக்குக்கு எதிர் பார்க்கப்பட்டது கீழே உள்ளது.

ஒரு வழக்கறிஞரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் திறமையைத் தவிர வேறொன்றையும் ஆனால் தேர்ச்சியற்ற நிலை மற்றும் அலட்சியம் தவிர வேறொன்றையும் சுட்டிக்காட்டவில்லை. உடனடித்தன்மை, பிரதிவாதி நிலத்தின் எல்லைகள் அல்லது விவரம் இல்லாமல் ஒரு உறுதி வெளிப்பாட்டுமனுவை சமர்ப்பித்துள்ளார்.

15. ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு வழக்கறிஞர் செலுத்த வேண்டிய முதல் கடமை உரிய விடாமுயற்சியுடன் செயற்படுவது மற்றும் கவனமாகவும் திறமையுடனும் அவரது சுருக்கத்தை தயார் செய்தலாகும். நீதிபதி ஏ.ஆர்.பி. அமரசிங்க வழக்கறிஞர்களின் தொழில்முறை நெறிமுறைகள் மற்றும் பொறுப்புகள், என்பதில் எழுதுகிறார். ஒரு வழக்கறிஞர் ஆலோசனை வழங்கல் மற்றும் அவரது வாடிக்கையாளரைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் மற்றும் நேர்மையான கவனிப்புடன் மனச்சாட்சியுடன் தொழில்முறை உதவியை வழங்கவேண்டும். அத்துடன் வழக்கறிஞர் எந்த தொழில்முறை விடயத்தையும் அவரால் சரியான நேரத்தில் சரியான விடாமுயற்சி அணுக முடியாவிட்டால் அதனை ஏற்கக்கூடாது.

16. மிகவும் விவேகமான வழக்கறிஞர்கள் கூட எந்த மனிதனைப் போலவே தவறுகளுக்கு சுலபமாக ஆளாகிறார்கள். ஆனால் எப்போது ஒருவர் தன்னை ஒரு முதிர்ந்தவர் என்று மதிப்பிட்டு அதற்கேற்ப கட்டுப்படுத்தினால் - நம்பிக்கையை காட்டினால் அவருடைய சேவைகளை நாடுபவர்கள் மற்றும் அத்தகைய மதிப்பீட்டை சந்திக்கும் ஒரு தரநிலையை அவரது சகாக்களும் எதிர்பார்க்கிறார்கள். தற்போதைய விசாரணையில் பிரதிவாதியான சட்டத்தரணி முதலில் 'ரூ. 1.5 மில்லியன் தொகையைக் குறித்துக் காட்டினார். உண்மையில் நிகழ்நிலை புகார்தாரரிடமிருந்து 'ரூ. 4.5மில்லியன் தொகைக்குமேல் 2015 இல் பெற்றுக் கொண்டார். பதிலளிப்பவர் தொழில்முறைகட்டணமாக எவ்வளவு தொகையை அறவிட்டிருப்பர் என பார்வைநோக்கில் ஒருவர் கருதும்போது இது அளவின் உயர்ந்ததாகக் காணப்படுகின்றது.

17. நமது தொழிலின் ஒழுக்க நெறிமுறை விதிகள் மற்றும் நடத்தை நெறிமுறைக் கோவைகள் நாம் பொது நலன் மற்றும் நீதியின் சரியான நிர்வாகத்தின் பிரதிபலிப்புக்காக கவனிக்க வேண்டியது அவசியம். மற்றும் இணங்கி நடத்தல் அல்லது தொழில்முறை சுய விருப்பம் மற்றும் பாதுகாப்புவாதத்தைவிட நீதியின் முகாமைத்துவம் கவனிக்கப்பட வேண்டும். ராஸ் க்ரான்ஸ் டன், என்பவரின் கூற்றுப்படி "...தொழில் முறை ஒழுக்கம் தொடர்பான விடயங்களில் ஆதாரம்-பிரமாணம் நிலைப்பாடு பொது மக்களின் பார்வையில் தொழிலின் நிலைப்பாடு ஆகும். மற்றும் நேர்மையற்றவர்களிடமிருந்து அல்லது தேர்ச்சியற்றவர் -திறமையற்றவர்களிடமிருந்து பொது பாதுகாப்பு ஆதாரம்-பிரமாணம் நிலைப்பாடு.

18. ஒரு வழக்கறிஞர் மிகவும் பெருந் தொகைகளை அறவிடும்போது,-அவர் தன்னை ஒரு உயர்தரத்திற்கு உரியவர் என கருதுகின்றார். அது விசாரணைகளைத் தீர்ப்பதில் இயல்பில் இந்த நீதிமன்றத்திற்கு மட்டுமே பொருத்தமானது. இந்த வகையில் அவர்கள் நிர்ணயித்த அத்தகைய தரநிலைகளுக்கு எதிராக பதிலளிக்கும் வழக்கறிஞர்களை நடத்துவது ஒரு வழக்கறிஞரிடம் எதிர்பார்க்கப்படும் விவேகத்தின் பொதுவான தரங்களுக்கு மேலதிகமானது.

19. குருநாகல் மாவட்ட நீதிமன்றத்திலிருந்து கிடைக்கும் வழக்குப் பதிவுகள் ஆவணங்கள் உட்பட கிடைக்கப்பெறும் முக்கியமான ஆவணங்கள் பயன்படுத்துதல் பின்தொடர்ந்து நோக்கும் போது தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு பாரிய குறைபாடுகளைக் கொண்டிருப்பதை நான் அவதானிக்கிறேன். மற்றும் பதிலளிப்பவர் ஒரு சட்ட நிபுணருக்குத் தகுதியற்றவராக நடந்து கொண்டார் என்பதையும் நான் அவதானிக்கின்றேன்.

ஒரு தொழில்முறைச் சேவைக் கட்டணமாக ஒரு கணிசமான தொகைப் பணம் செலுத்தியமையானது செலுத்திய பணத்துக்குரிய பெறுமதியை பெற்றுக்கொள்ளாமையானது வணக்கத்திற்குரிய தேரருக்கு மட்டுமே புகார் கூற நியாயமானது. குறிப்பாக தவறான முறையைக் கருத்தில் கொண்டு அவரது விடயம் கையாளப்பட்ட நிலையில் வணக்கத்திற்குரிய தேரருக்கு மட்டுமே புகார் கூற நியாயமானது.

20. பதிலளித்தவர், தாம் குருநாகலுக்கு பல தடவைகள் குறித்த வழக்குக்காக பிட்ரா கோட்டேயில் உள்ள அவரது இல்லத்திலிருந்து பயணித்ததாக மேலும் தெரிவித்தார். வழக்குப் பதிவேடு, இந்த வழக்கு மே 2015 ஆரம்பிக்கப்பட்டது என குறித்து காட்டுகின்றது. மற்றும் இந்த வழக்கு இருபத்தி இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எடுக்கப்பட்டுள்ளது. அல்லது ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது. பதிலளிப்பவர் ஏழு முறை மட்டுமே ஆஜராகினார். புகார் மனுதாரர் பிரதிநிதித்துவம் நிகழ்நிலையில் இல்லாதபோது இன்னொரு வழக்கறிஞர் ஏழு திகதிகளில் ஆஜரானார்.


21. பதிலளிப்பவர் ஆஜராக முடியாத போதெல்லாம் அவர் மற்றொரு வழக்கறிஞர் ஆஜராவதற்கான ஏற்பாடுகள் செய்து அவரது நிலைப்பாடாகும். இருப்பினும் இந்த நீதிமன் றத்தின் முன் மெய்நிகர் புகார்தாரருடைய சாட்சியத்தின் படி அவருக்குப் பதிலாக ஆஜரான வழக்கறிஞர்கள் வழக்கைக் கையாளவும் நீதிமன்றத்திற்கு உதவவும் வெளிப்படையாகத் தகுதியற்றவராக இருந்தார். மெய்நிகர் புகார்தாரர் அந்த வக்கீல்களால் கேட்கப்பட்ட எந்த கேள்விக்கும் பதிலளிக்க முடியவில்லை என்று தனது சாட்சியத்தில் கூறினார்.

22. வழக்கறிஞர்கள் தங்கள் ஜூனியர்களை அல்லது அறிந்து கொள்ளப்பட்ட மற்றய வழக்கறிஞர்களை தங்களுக்குப் பதிலாக நடைமுறையில் தனிப்பட்ட அல்லது தொழில்முறை - சிக்கல்கள்- எழுவினைகள் எழுமிடத்து ஆஜராகும்படி விடுவது பொதுவாக நடைமுறையல்ல. இதில் உள்ளார்ந்த தவறு எதுவும் இல்லாதாபோதும், ஒரு வழக்கறிஞர் அல்லது பதிவுசெய்த வழக்கறிஞர் ஒரு விடயம், தங்கள் வாடிக்கையாளரின் நலன்களை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க அவர்களுக்குப் பதிலாகத் தோன்றும் மற்ற வழக்கறிஞர்களால் நன்றாகப் பணியாற்றக் கடமைப்பட்டுள்ளது. அவர்களும் இது போன்ற மாற்றீடுகள் சாதாரணமாக செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்

இதுபோன்ற மாற்றீடுகள் வழக்கமாகச் செய்யப்படுவதில்லை. ஏனெனில் இந்த முறை நீதித்துறை நேரத்தை வீணடிக்கிறது. இந்தவகையில் இது நீதி அல்லது அவர்களின் வாடிக்கையாளரின் நலனுக்காக அல்ல.

23. இது குறித்து நீதியரசர் அமரசிங்க கூறும்போது, "" எங்கு அல்லது இங்கே அவர் நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக கோரப்பட்டுள்ளாரோ. வெளிப்படையாக, ஒரு வழக்கறிஞர், தனது திறமையை பயன்படுத்த முடியாது, மற்றும் அவரது தொழில்முறை ஈடுபாட்டை உறுதிசெய்யவும் முடியாது, அவர் விசாரணை இடம் மற்றும் நேரத்தில் ஆஜராகவில்லை என்றால் விடயம் பட்டியலிடப்பட்டுள்ளது. இலங்கை சட்டவிதி விதி 16 கூறுவது போல், வழக்கறிஞர் இருந்தால் தவிர அவர் அவ்வாறு செய்ய வேண்டும்

24. மெய்நிகர் புகார்தாரர் தனது புகாரில் பதிலளித்தவர் இரண்டு வழக்குகளைக் கையாளுதலை மேற்கொண்டதாகக் கூறினார் - ஒன்று குருநாகலிலும் மற்றொன்று மினுவாங்கொடையிலும் ஆகும். என்றாலும் பதிலளிப்பவர் இந்த நீதிமன்றத்தின்




பதிவாளரால் முதலில் வழங்கிய காரண முன்னறிவிப்பை பற்றி அமைதியாக இருந்தார். அவர் தனது அவதானிப்புகளை உறுதிமொழி மூலம் சமர்ப்பித்தார். இந்த அவதானிப்புகளில், எந்தவொரு அறிவுறுத்தல்களையும். மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு பெறுவதை அவர் கடுமையாக மறுத்தார். ஆரம்பத்தில் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் 2015 ஆம் ஆண்டில், மினுவாங்கொடை நீதிமன்றம் மாவட்ட நீதவான் நீதிமன்றமாக இணைந்திருந்தது.

25.பதிலளிப்பவரின் வாக்கு மூலத்தில் மினுவாங்கொடையில் தகராறு எதுவும் இல்லை எனக் கூறினார். பிரதிவாதி வழக்கறிஞர் கீழ் ஒரு கோரிக்கை கடிதத்தின் கையளிக்கப்படும்வரை பதிலளித்தவர் தனது சார்பாக மினுவாங்கொடையில் மெய்நிகர் புகார்தாரருக்கு நடந்த ஒரு வழக்குகுறுக்கு விசாரணையில் குறித்து தொடர்ந்து எதுவும் குறிப்பிடவில்லை. இருப்பினும் கூறப்பட்ட கோரிக்கைக் கடிதம் கையளிக்கப்பட்டவுடன் மெய்நிகர் புகார்தாரரின் குறுக்கு விசாரணை, மெய்நிகர் புகார்தாரர் நடவடிக்கையைத் தொடர வேண்டாம் என்பதிலிருந்து பதிலளிப்பவரின் விசாரனை வடிவம் அறிவுறுத்தல்கள் உள்ளன என்பதை உட்புகுத்த வலியுறுத்த முயற்சிக்கும் விசாரணை வடிவம் மாற்றப்பட்டது.

26.பிரதிவாதி முதலில் மினுவாங்கொடை வழக்கு ஒன்றில் தனக்கு தொடர்பு இல்லை என மறுத்த போதிலும், மெய்நிகர் புகார்தாரர் தெரிவிக்கின்றார்: பதிலளித்தவர் மினுவாங்கொடை விவகாரம் தொடர்பாக அவர் மீண்டும் மீண்டும் விசாரித்ததைத் தொடர்ந்து மேற்கூறிய கோரிக்கை கடிதத்தை கொடுத்ததாகக் கூறுகிறார்.

மேற்படி கோரிக்கை கடிதத்திற்குப் பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதை மெய் நிகர் புகார்தாரர் காணமுடியாதபோது அவர் வழக்கின் இலக்கத்தினை பிரதி வாதியிடம் கேட்டுக்கொண்டார். அந்த நேரத்தில் அவருக்கு எண். 196/L. கொடுக்கப்பட்டது. மெய்நிகர் புகார்தாரர் அதனுடைய முன்னேற்றம் தொடர்பாக சரிபார்க்க மாவட்ட நீதிமன்றதிற்கு விஜயம்செய்தபோது, அவர் வழக்கு எண். 196/L ஆண்டியம்பலமாவில் உள்ள நிலம் சம்பந்தப்பட்ட ஒன்றாக இருப்பதைக் கண்டறிந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்...

வவுனியாவில் இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக் குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று வவுனியா வில் நடைபெற்றது.

நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராசா அவர்களின் இராஜினாமா சம்பந்த மாக வாக்கெடுப்பு நடத்துவது என்ப தாக இருந்தது. எனினும் இது சம் மந்தமாக பல வாதப்பிரதிவாதங்கள் இருந்த போதிலும் 18 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ஓர் ஆவணத்தைச் சமர்ப்பித்தனர்.

அதில் தலைவர் மாவை சேனாதி ராசா கட்சியின் நன்மை கருதி தனது பெயருக்குக் களங்கம் ஏற்படாத வகை யில் தன்னுடைய இராஜினாமாவை உறு திப்படுத்த வேண்டும் என்று கோரப் பட்டிருந்தது.

மேலும் சிலரும் அந்தக் கருத்துக் களை ஏற்றிருந்தார்கள். அதற்கு எதி ரான கருத்துக்களும் முன்வைக்கப் பட்டன.

இறுதியில் கட்சி ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளது. மாவை சேனாதிராசா அவர்கள் தொடர்ந்தும் கட்சியின் அரசியல் குழுத் தலைவராக செயற் படுவார். பதில் தலைவராகக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவராக செயற்படும் சி.வி.கே.சிவஞானம் செயற்படுவார். இதன்போது பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் வாக்கெடுப்பு இன்றி ஏகமனதாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பிரிவினை இல் லாது இந்த முடிவு எடுக்கப்பட்டுள் ளது.

அரசியல் குழு என்பது குழுவாக எடுக்கப்படும் தீர்மானங்களை மையப் படுத்தி, மத்திய செயற்குழு சந்திக்க முடியாத தருணங்களில் அரசியல் குழு கூடுவது வழக்கமாக இருக் கிறது. பல முக்கிய விடயங்களை அரசி யல் குழுவே எடுத்திருக்கிறது.

எனவே முன்னைய காலத்தில் மாவை சேனாதிராசா கட்சித் தலைமைப் பொறுப்பை எடுத்தபோது சம்பந்தனை அரசியல் குழுவின் தலைவராக நிய மித்திருந்தோம். அதனடிப்படையிலே தான் இப்போது மாவை சேனாதிராசா அந்த பதவியினை வகிப்பார் என்ற தீர்மானம் எடுத்துள்ளோம்.

இதேவேளை கட்சி தொடர்பாக யாழில்தொடரப்பட்ட வழக்கில் இதுவரை கட்டளைகள் ஏதும் வழங்கப்படவில்லை எனவே அதுகுறித்து கருத்துத் தெரி விப்பதற்கு இல்லை என்றார். (ந-7,250)

## அரியநேத்திரன்...

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளதுடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும் இடைநிறுத்தப்பட் டுள்ளதாகத் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற் குழுக்கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

இதன் பின்னர் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன், கட்சியின் உறுப்பின ரான சிவமோகன் மீது தேர்தல் காலங் களில் கட்சியினுடைய வேட்பாளர் களை நேரடியாகத் தாக்கி ஊடக சந் திப்புக்களை நடாத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் இருப்பதால் அவரை கட்சியிலிருந்து இடை நிறுத்தி விளக்கம் கோருவது என்று தீர்மானிக் கப்பட்டுள்ளது. அரியநேத்திரன் ஏற் கெனவே இடைநிறுத்தப்பட்டிருக் கிறார். அவரையும் கட்சியிலிருந்து விலக்கலாம் என்ற பிரேரணையும் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன், கடந்த தேர்தலில் கட்சிக்கு எதிரான வகையில் வேறு கட்சிகளோடு அல்லது சுயேட்சைக் குழுக்களோடு இணைந்து போட்டியிட்டவர்கள் அனை வரையும் உடனடியாகக் கட்சியிலிருந்து விலக்குவதாக மத்திய செயற்குழு தீர் மானம் எடுத்துள்ளது.

மேலும், வேறுகட்சிகள் மற்றும் குழுக்களுக்காக பிரசாரம் செய்தவர் கள் மற்றும் கட்சியின் முடிவுகளுக்கு மாறாக ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரம் செய்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். சிலருக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய வர்களுக்கும் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ந-7,250)

## நீதி அமைச்சர்...

இச்சம்பவம் தொடர்பில் விசார ணைகளை முன்னெடுத்து வரும் இரக சிய பொலிஸாரால், சபாநாயகர் அலு வலகத்தில் கையளிக்கப்பட்ட கடிதம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட் டுள்ளது.

அமைச்சரின் பெயருக்கு முன்னால் 'கலாநிதி' என்ற பெயருடன் அனுப்பப் பட்ட கடிதம் ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளருக்கு கிடைத்துள்ளதாக சபாநாயகர் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்படு கின்றது.

அதன்படி, எதிர்வரும் நாட்களில் இரு அலுவலகங்களிலும் உள்ள அதி காரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய் யப்பட உள்ளது.

வாக்குமூலத்துக்காகப் பாராளு மன்ற அதிகாரிகள் இரகசியப் பொலி ஸாரிடம் அழைக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும். (ந-7)

## பெப்...

போது தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்பு அறிக்கைகளைக் கையளித்து வரு கின்றனர்.

புதிய ஊழல் தடுப்புச் சட்டத் தின் 82(ஏ) பிரி வின்படி, அனை த்து எம்.பிக் களும் பதவிக்கு நியமிக்கப்பட்ட மூன்று மாதங் களுக்குள் தங் களது சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண் டும்.

அதன்படி, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு வருட மும் ஜூன் 30ஆம் திகதிக்கு முன் னர் சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண் டும்.

புதிதாகத்தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன் னர் சொத்துப் பொறுப்பு அறிக் கையை சமர்ப் பிக்க வேண்டியி ருப்பதால், ஜூன் மாதம் மீண்டும் அந்த அறிக்கை களை பெற்றுக் கொள்வதா? என் பது தொடர்பில் இது வரை தீர்மானிக் கப்படவில்லை என இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரி விக்கின்றன. (ந-7)

## எம்.ஏ.சுமந்...

ஞானம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் முடிவடைந்ததன் பின்னர் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்ற குழுப் பேச் சாளராக ஸ்ரீநேசனை நியமித்துள்ள மையினால் அவர் பாராளுமன்ற விட யங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிப்பார்.

எனினும், தமிழ் அரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளராகத் தொடர்ந்து எம்.ஏ.சுமந்திரன் செயற்படுவார் என் றும் தெரிவித்திருந்தார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.12.28
சீட்டிழுப்பு இலக்கம் 5699
W 3 7 6 4 6 4
அத சம்பத
W 6 4 6 4
சீட்டிழுப்பு இலக்கம் 274
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1729
D 12 40 45 61 D
Double Chance 87104

மெகா பவர்
திகதி 28/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2047
Q 02 09 20 62 63
137190

லக்கி 7 VIP
திகதி 2024.12.28
சீட்டிழுப்பு இலக்கம் 0525
K 0 4 0 7 6 3 K

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3941
சீட்டிழுப்பு திகதி 28.12.2024
B 13 41 70 74
B 178699

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.28
சீட்டிழுப்பு இலக்கம் 1008
கும்பம் 02 12 30 57 கும்பம்
023472 04

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.12.2024 407
Q 4 6 7 9 3 7
16301
ரூ.28,065,813.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2673
சீட்டிழுப்பு திகதி 2024.12.28 தினம் சனிக்கிழமை
26 27 33 55 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,538,940.00

சனிதா
28.12.2024 4834
17 50 58 67 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,921,330.40
66798

சசிரி
0588 28.12.2024 சனிக்கிழமை
33 36 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4385
சீட்டிழுப்பு திகதி 28.12.2024 தினம் சனிக்கிழமை
30 34 47 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,358,522.80
217869

கப்ருக
P 39 03 18 62 68
1849 28.12.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.559,669,822.60

சனிக்கிழமை
2499
2024.12.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,991,915.20
ADA KOTIPATHI
15 46 57 61 N
728360

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகளுடன் வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை விறாந்தை தனிக் கிணறு என 2 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு குடியிருப்பதற்கேற்ற வகையில் உடனே விற்பனைக்குண்டு.

Whatsapp : +61 421290240

(2762)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து 2 - 3 Km தூரத்தில் 3 பேர் கொண்ட குடும்பம் (வைத்தியர்) ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை.

**077 030 4848**

(2865)

## STUDY IN UK

CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND

**IELTS**

கடந்த 14 வருடகாலமாக யாழ் மண்ணில் சிறந்த சேவைகளை வழங்கிவரும் முன்னணி நிறுவனத்தினூடாக உங்கள் உயர்கல்வியினை வெளிநாடு ஒன்றில் தொடர்ந்திட விருப்பமா?

**WEC COLLEGE**

ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
மற்றும் கிளை : சாவகச்சேரி

0779265447/ 0217200989

(677)

# அண்ணா

## விரைவுப் பொதிகள் சேவை

ANNA EXPRESS COURIER SERVICE

வெளிநாடுகளுக்கான பொதிகளையும் கடிதங்களையும் விரைவாகவும் நம்பிக்கையுடனும் அனுப்பிட



| லண்டன் | | UK |
|---|---|---|
| 11Kg+ | Offer | 1480/= |
| 21Kg+ | | 1400/= |

**075 330 5500**
**076 122 1566**

(2849)

யாழ்ப்பாணம் சங்கானை வவுனியா மல்லாகம் ஆவரங்கால் நெல்லியடி கைதடி கிளிநொச்சி வவுனியா திருகோணமலை கொட்டாஞ்சேனை

## வேலையாட்கள் தேவை

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் (Accountant) (ஆண், பெண் இருபாலார் ) தேவை.

இடம் : யாழ்ப்பாணம்
தொ.இல : 077 158 0268
077 839 3974

அத்துடன் கொழும்பில் பணி புரிவதற்கு டிரைவர் (Driver) (ஆண்) மட்டும் தேவை. அத்துடன் கணக்காளர் மற்றும் உதவியாளர் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்)

தொடர்புகளுக்கு :

**077 839 3974**

(679)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :

**075 033 6759**

(620)

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**

## நயினை அம்மன் திருமண சேவை

சகல சமூகத்தினருக்குமான விரைவான உள்நாட்டு, வெளிநாட்டு திருமண சேவை.
டச்சு வீதி, கல்வியங்காடு.
பதிவுக்கட்டணம் இலவசம்

Whatsapp:
076 050 3863
076 311 9485

(687)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டப் பகுதியில் இரண்டு பரப்பு பெறுமதியான நிலத்துடன் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட அதி சொகுசு வசதிகளுடன் ஆறு அறைகள் கொண்ட மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

**மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும் :**

**077 391 2298/ 076 009 8661**

(683)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு :

**077 919 1529**

(2867)

## V2 VISA SERVICES

கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas- All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1808)

## வீடு வாடகைக்கு தேவை

**13 வருட காலமாக இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவைப்படுகின்றது.**

1. திருநெல்வேலி (பலாலி றோட்)
2. கோப்பாய் (பருத்தித்துறை வீதி)
3. மானிப்பாய் (யாழ்ப்பாணம் வீதி/ சுதுமலை வீதி)
4. பண்டத்தரிப்பு (சண்டிலிப்பாய் வீதி)

**உரிய முற்பணம், தகுந்த வாடகைப் பணம் வழுங்கப்படும்.**

**077 337 4261**

(2841)

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் கைதடி மெயின் றோட்டுடன் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 1 ½ , 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப் பாதையுடன், நிலப் பரப்பு, மேட்டு நிலம், நன்னீரூற்று
- UDA அனுமதி, பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்,
- தரகர் தேவையில்லை
- பரம்பரை ஆவணம்
- பார்வையிடும் நேரம் : காலை 8.00 முதல் மதியம் 1.00 வரை பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 வரை

குரு

**076 069 1105/ 076 298 1105**

(2864)

# சிறுநீரகம் தேவை

**"0" குருதி வகையைச் சேர்ந்த ஒருவருக்கு "0" குருதி வகை சிறுநீரகம் அவசரமாகத் தேவை.**

**வயதெல்லை : 42 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்.**

**HLA Report இருப்பின் Whatsapp பண்ணவும்.**

**076 540 6732** Call/ Whatsapp
**077 723 8937** Call

(2802)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 238/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 160/= | |
| 01 5Kg Prima மா பை | - 920/= | ~~1150~~/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 274/= | Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 400/= | |
| 1Kg பயறு | - 580/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 770/= | |
| 01 விஜிதா அரிசி 10Kg | - 2720/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 237/= | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 220/= | Max 2Kg |
| 01 டசின் தீப்பெட்டி | - 160/= | ~~240~~/= |







தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:- happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(686)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.